தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஐப்பசி 13 (29-10-'60). சனிக்கிழமை | இதழ் 20

செய்திப்பாட்டு

கடல்சூழ முப்புறத்தும் கதிரொளியார்
முத்தெடுக்கும் கவினுர் நாடு
படகோடு பெருநதிகள் பாய்ந்துவளம்
கொழிக்கின்ற பழனம் சூழ
உடல்சோர உழைத்தின்பம் உகக்கின்ற
உழைப்பாளர் உலவும் நாடு
குடல் ஆர உணவின்றிக் குலத்தோடும்
உயிர்போக்கும் கொடுமை என்னே!

தரையெல்லாம் இரும்புண்டு தங்கமுண்டு
நிலக்கரியும் தனியே உண்டு
வரையெல்லாம் அகில்தேக்கு வளர்காப்பி
தேயிலைநல் வளங்கள் உண்டு
புரையில்லாத் தமிழுண்டு புலிநிகர்த்த
பெருவீரம் போற்றல் உண்டு
கரையில்லாப் பசிக்கடலின் கரைகாண
முடியாத கதிதான் என்னே!

பாலூட்டிச் சீராட்டிப் பசும்பொன்னுல்
சுடர்மணியால் பணிகள் பூட்டித்
தாலாட்டிக் கைப்புறத்தே ஏந்துகின்ற
தாயாரும் தந்தை யாரும்
காலாட்டிக் கையாட்டிக் களிமழலை
மொழிபேசும் காதல் மக்கள்
மேலோட்டித் துயர்காட்டும் பாழ்ங்கிணற்றில்
விழுந்தொழியும் விதந்தான் என்னே!

தண்டலமாம் சிற்றூரில் தளராத
உழைப்பாளன் தகைமை மிக்கான்
பெண்டுடனே பிள்ளைகளோர் ஆறுடனே
பெருங்கிணற்றில் சாய்ந்தான் மாய்ந்தான்
தெண்டிரையார் கடல்நடுவே சென்றமிழ்ந்து
நிரைநிரையாச் செத்தார் பல்லோர்
மண்டலமே! வானகமே! மதிமிக்க
வளநாடே! வகைசொல் வீரே

மதியில்லார் மானமில்லார் வடநாட்டுத்
தொழும்பரெலாம் மந்தை யாக
விதியில்லார் தலைவரென வீணரெலாம்
மந்திரியா வீற்றி ருந்தார்!
கதியில்லாத் தீந்தமிழர் கடல்நீரும்
பெருங்கிணறும் கதியாய் வீழ்ந்தார்
புதிதல்ல தமிழ்மக்காள்! புலிபோலப்
புறப்படுவீர் புரட்சி செய்வீர்!

—மாசரா.

அண்ணாவும் ஆச்சாரியும் சிங்கமும் புலியும் போலிருப்பவர்கள். என்றார் காமராசர்!
மாடுகள் இரண்டிருப்பதால் சிங்கமும் புலியும்

சிறுகதை

இரண்டாவது கைமை

இராசபாளையம் கதைப்பித்தன்.

சுந்தர்

அந்தி நேரம். இரவுக்கும் பகலுக்கும் இடையே உள்ள நேரம். அலுவலகத்தை விட்டு அலுப்போடு கிளம்பி என் அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். மதுரையிலிருந்து பரமக்குடிக்கு மாற்றப்பட்ட நான் இன்றுதான் வேலையை ஒப்புக் கொண்டேன். ஆகவே வந்தவுடனேயே நிறைய வேலைகள் நிறைவேற்றப்படாமல் என்னை எதிர் நோக்கிக் காத்திருந்தன. அத்தனை வேலைகளையும் பார்த்து முடிக்கக் கூட இல்லை. அதற்குள் இத்தனை நேரமாகிவிட்டதே! இலேசாக இருட்டக்கூட தொடங்கிவிட்டது.

மனிதர்கள் நடமாட்டம் அந்தத் தெருவில் அதிகம் இல்லை. ஊருக்குப் புதிதாகையால் தெருவின் இரு பக்கங்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு சற்று அலுப்பை மறந்தவனாக நடந்தேன். சிறிது தூரத்தில் ஒரு தெருக்குழாய். அதிலே சில பெண்கள் குடங்களில் தண்ணீர் பிடித்தவண்ணம் நின்றனர். நான் அந்தக் குழாயின் அருகில் நெருங்கினேன். அப்போது ஒரு அம்மாள் என்னைக் கடந்து தெருவின் குறுக்காக தன் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். அப்படிச் சென்று கொண்டிருந்த அம்மாளுக்கு நாற்பது வயது இருக்கலாம். தற்செயலாக என்னை நிமிர்ந்து பார்த்தாள். எதிரே இருந்த தெருவிளக்கின் வெளிச்சத்தில் என் முகம் 'டளீரெ'ன்று தெரிந்தது. தற்செயலாக என்னைப் பார்த்த அம்மாளின் கண்கள் அப்படியே நிலை குத்தி நின்றுவிட்டன. கண்கள் வெறித்துப் பார்த்தபடியே இருந்தன. வாய்மட்டும் ஏதோ பேச முயன்றது. இடையிலிருந்த குடம் நழுவி டங்கென்று கீழே விழுந்துவிட்டது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரு கணம் அப்படியே அந்த அம்மாளின் நிலையைக் கண்டு திகைத்து நின்றவன், மறுகணம் சமாளித்தபடி மெல்ல நடக்கத் தொடங்கினேன். சற்று தூரம் சென்றதும் குழம்பிய உள்ளத்தோடு திரும்பிப் பார்த்தேன். நடுங்கியவண்ணம் அந்த நாற்பது வயது அம்மாள் தன் வீட்டு வாசல் திண்ணையிலுள்ள மூங்கில் கம்பத்தைப் பிடித்த வண்ணம் என்னையே பார்ப்பது தெரிந்தது. 'ஏன் என்னைப் பார்த்ததும் அந்த அம்மாள் தடுமாற வேண்டும்? இடுப்பிலிருந்த குடம் கீழே நழுவி விழ, கண்களிரண்டும் நிலை குத்தி நிற்கும்படியாக அவ்வளவு அதிர்ச்சி என்னைப் பார்த்ததும் ஏற்பட வேண்டும் என்றால் அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும்! மிகவும் சோக சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்ட காரணமாக இருக்க வேண்டும்!''

சிந்தனைச் சுழலில் சிக்குண்டு தவித்தபடியே அறையை அடைந்தேன் இரவு சாப்பிட்டுவிட்டுப் படுக்கையில் படுத்ததும் அதே சோக சம்பவம்—அந்தப் பரபரப்பூட்டும் சம்பவம்தான் என் நினைவுத் திரையில் நிழலாடியது. அந்த வெறித்த கண்கள் நிலை குத்தி இமையாது நின்ற இரு கண்கள், நடுங்கியவண்ணம் மூங்கில் கம்பைப் பிடித்தபடி நின்ற நாற்பது வயது அம்மாள். மாறி மாறி இவைதான் என் கண்முன் சுழன்றன.

ஏன்? ஏன்? எதற்கு? என்ற வினாக்களை எனக்குள்ளே எழுப்பிக் கொண்டு குழம்பியபடி களைப்புமிகுதியால் என்னை மறந்து உறங்கிவிட்டேன். மறுநாள் காலை.

'தேவி விலாஸ்' ஹோட்டலில் காலைச் சிற்றுண்டியைக் கச்சிதமாக முடித்துக்கொண்டு திகைப்பூட்டிய சம்பவம் நடந்த அந்தத் தெருவிற்குள் நுழைந்தேன். அதே தெருக்குழாய். எதிரே இருந்த வீட்டை ஏறிட்டு நோக்கினேன் சுமாரான பெரியவீடு. வீட்டின் வாசற்கதவு தாழிடப்பட்டிருந்தது. உள்ளே இருக்கிறார்கள் போலும் அந்த அம்மாள் 'இருக்கட்டும்' நான் அலுவலகத்தை நோக்கி நடந்தேன். இருந்தாலும் அந்தச் சந்தேகக் கேள்விகள் என் உள்ளத்தில் தோன்றித் தோன்றி சஞ்சலத்தை அளித்துக்கொண்டே இருந்தன. மாலையில் எப்படியாவது இதைத் தெரிந்துகொண்டே ஆக வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டவனாக அந்த அந்திநேரத்தில் அலுவலகத்தைவிட்டுக் கிளம்பினேன். அந்த தெருக்குழாய் எதிரே இருந்த வீடு. மெல்ல நடந்தேன். வீட்டுவாசலில் அந்த அம்மாள் நின்று கொண்டிருந்தாள். எதையோ பறிகொடுத்த ஏக்கத்தோடு நிற்பது போன்ற நிலை. நான் வீட்டருகில நடந்த சமயம்.

''இந்தாப்பா! தம்பி! இங்கே கொஞ்சம் வாப்பா'' தயக்கத்தோடு அந்த அம்மாள் விடுத்த வேண்டுகோள் என் நடைக்குத் தடை போட்டது. நான் நின்றேன. 'உள்ளே வாப்பா!' உருக்கமான குரல்!

வியப்பும் வினாக்குறியும் விழிகளிலே தெறித்து நிற்க, விறைப்பாக நான் வீட்டிற்குள்ளே நுழைந்தேன்.

அந்த அம்மாள் கீழே பாயில் உட்கார்ந்தார்கள். என்னையும் உட்காரச் சொல்லவே பாயில் அமர்ந்தேன். தலையைத் தூக்கி சுவரை நோக்கியவன அப்படியே திடுக்கிட்டுப் போய் விட்டேன். உதடுகள் வியப்பால் ஒட்டிக்கொண்டன. பேச்சு வரவில்லை. என்னைப்போலவே, அப்படியே சாயலுள்ள ஒரு வாலிபனின் புகைப்படம் என் எதிரே சுவரில் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டுதான் நான் அப்படித் திகைத்தேன் கண், மூக்கு, வாய், கிராப்பு எல்லாம் என்னைப்போலவே. எனக்கு அண்ணன் தம்பிகள்கூட யாரும் கிடையாதே! யார் இவன்?

சோகச்சிலையாக அமர்ந்திருந்த அந்த அம்மாள் என்னையே வெறித்த பார்வையோடு பார்த்தபடி 'உன்னைப் போலவேதானப்பா என் மகன் மனோகரும் இருந்தான். ஆசையாய் வளர்த்தேன். திருமணமும் செய்து வைத்தேன். ஆனால ஆனால்...'' துக்கம் தொண்டையை அடைக்க அந்த அம்மாள் சேலைத் தலைப்பில் முகம் புதைத்தபடி விம்மத் தொடங்கினாள்.

என் கண்களும் கலங்கின. ''என்ன ஆயிற்று அவனுக்கு'' என்று அவசரத்தோடு அலறியதும் என் உள்ளம். ''பத்து நாளைக்கு முன்னால்தான் பாழாய்ப்போன பஸ் ஒன்று மோதி என் புத்திரன் உயிரைக் குடித்து விட்டது. இப்போது உன்னைப் பார்த்தது முதல் என் மகன் ஞாபகம் தான் எனக்கு வருகிறது. ''உன் பெயர் என்னப்பா?''

மகனைப் பறிகொடுத்த அந்தத் தாயின் வருத்தம் தோய்ந்தவார்த்தைகள் என் உள்ளத்தைத் தொட்டன. கண்ணீர் முத்துக்கள் இரண்டு கன்னத்தில் வழிந்தோட ''என் பெயர் சுந்தர்'' என்று சொன்னேன்.

இதற்குள் உள்ளேயிருந்து ஓர் இளமங்கை மெல்ல நடந்துவந்து எவர்சில்வர் தம்ளரிலிருந்த காப்பியை என் முன்னால் வைத்துவிட்டு உள்ளே போய் ஒதுங்கியபடி நின்றாள். ''இவள்தானப்பா அவன் மனைவி சுமதி! பாவம்! வாழக் கொடுத்து வைக்கவில்லை அவனோடு! என்னோடு அவளும் நிற்கிறாள் பறிகொடுத்தபடி! என் இரண்டாவது மகன் ரவீந்திரன் பம்பாயில் பெரிய கம்பெனியில் வேலையாக இருக்கிறான் அவன்இப்போது செலவுக்குத் நூறு, ஐம்பதென்று எனக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறான். இருந்தாலும் இந்த மகனைப் பறிகொடுத்ததையும், இந்தப் பெண்ணின் பரிதாபமான முகத்தையும் நினைக்கும்போதுதான் என்னால் தாங்கமுடியாத அளவுக்கு துக்கம் வருகிறது'' என்று பேசி முடித்தாள்.

''இந்தாப்பா! என் கையாலே தரும் இந்தக் காப்பியையாவது குடி! அதாவது எனக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்''

அந்த அம்மாளின் நெஞ்சைத்தொடுகின்ற வேண்டுகோளை என்னால் மறுக்க முடியவில்லை. காப்பியை எடுத்துப் பருகினேன் சுமதியின் சோகமான கண்கள் என்னையே பார்த்துக்கொண்டு இருப்பதைக் கவனித்தேன். அந்தக் கண்களிலே தான் எவ்வளவு ஏக்கம்? திருமணமான உடனே கணவனைப் பறிகொடுத்துவிட்டு நிற்பதென்றால்.

''நேரமாகிறது! நாளை மறுபடியும் வருகிறேனம்மா'' விடைபெற்றுக் கொண்டவனாக எழுந்தேன். மெல்ல வெளியே வந்தேன். மறுநாளும் சுமதியின் வீட்டுக்குச் சென்றேன். என் வருகை அவர்களுக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருவதை உணர்ந்தேன். நாட்கள் செல்லச் செல்ல சுமதியின் வீட்டுக்கும் எனக்கும் நெருக்கம் அதிகமாகியது.

அவர்களுடைய மனத்திருப்திக்காக, நான் ஓட்டலில் சாப்பிடுவதைவிட்டு அவர்கள் வீட்டிலேயே உணவு உண்ணுமளவுக்கு மாறிவிட்டேன். அவர்கள் எவ்வளவோ மறுத்தபோதிலும் அதற்குரிய பணத்தை நான் கொடுக்காமல் விடவில்லை முதலில் அந்த அம்மாள் தான் எனக்கு உணவு பரிமாறினார்கள். நாளடைவில் சுமதியே அந்தப் பணியைச் செய்து வரலானாள். அவள் என்னைப் பார்க்கும் பார்வையில் ஏதோ ஒன்று இருந்தது. அந்த ஒன்று இன்னதென்று என்னால் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை. என்னையறியாமலே என் மனம் அவள்பால் இழுக்கப்படுவதைத் தடுக்க இயலாதவனாக இருந்தேன். ஆனால் அவள் என்ன நினைக்கிறாளோ? பெண்களின் உள்ளம்தான் கடலைவிட ஆழமானதாமே! அதை நான் மட்டும எப்படி அளந்துவிடமுடியும்? அவளாகத் தன் இதயத்தைத் திறந்து பேசினால்தான் தெரியும்!

சுமதி

திருமணமான இருபதாவது நாளில் கணவரை இழந்தேன். அவரை இழந்தபின் எனக்கு வாழ்வில என்ன இருக்கிறது? உலகமே எனக்கு வெறுத்துவிட்டது நான் ஏன் இன்னும் வாழவேண்டு! யாருக்காக வாழவேண்டும் என்று எண்ணலானேன். அப்போதுதான் சுந்தரைச் சந்தித்தேன் நான் எதிர்பார்க்கவே யில்லை, இப்படி ஒரு அதிசயம் என் வாழ்விலே நிகழும் என்று. என் கணவரைப் போலவே உள்ள ஒருவர், உயிரோடு என் முன் நின்று என்னோடு பேசினால் எனக்கு எப்படி இருக்கும்? நீங்களே சொல்லுங்கள்!

அவர் எங்கள் ஆறுதலுக்காக எங்கள் வீட்டுக்கு வந்தார். மிகவும் பரந்தமனம். எங்களை மகிழ்விப்பதற்காக எங்கள் வீட்டிலேயே உணவு உண்டார், நாள் செல்லச்

செல்ல அவருக்கு நான் உணவு பரிமாறும் போதெல்லாம் அவர் என் கண்ணுக்கு என் கணவராகவேகாட்சியளிக்கிறார். அவர், பார்வை பேச்சு, எல்லாம் என் கணவரைப் போலவே. என்னையறியாமலேயே என் மனம் சுந்தரை நோக்கிப் படரத் தொடங்கியது. வாழ்வை வெறுக்கும் நிலையிலிருந்த எனக்கு சுந்தரைக் கண்டதும், என் கணவரைப் போலவே இருந்த அவரைக் கண்டதும், வாழ்விலே ஒரு பற்று ஏற்பட்டது. ஆசை பிறந்தது. அது நேசமாக மாறியது. என்இதயத்தைத் திறந்து சொல்கிறேன். நான் அவரோடு மனைவியாக வாழத் துடித்தேன். ஆனால் இயல்பாக என்னோடு பிறந்த பெண்மை அதைச் சொல்ல வெட்கப்படுகிறது. அவரும் என்னைக் காதலிக்கிறார் என்றே நினைக்கிறேன்.

ஒருநாள—

அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை. அத்தை ஏதோ வேலையாக வீட்டின் பின் பக்கத்தில் இருந்தார். நான் அவருக்குப் பரிமாறினேன். அவர்தான் சுந்தர், என்னைத் தற்செயலாக நிமிர்ந்து பார்த்தார். எங்கள் இருவருடைய விழிகளும் ஒருகணம் நிலை மறந்து இமையாது நின்றன. என்வாய் ''உங்களை...நான்...'' என்று லேசாக இழுத்தபடி முனகியது. அவரும் தடுமாற்றத்தோடு ''சுமதி''...என்று ஏதோ பேச முயன்றார். ஆனால் பேச்சு வெளிவரவில்லை. கண்களும் இதயங்களும் கலந்து உறவாடும் போது வார்த்தைகள் வர மறுப்பது இயல்புதானே?

அவரைப்பற்றி அவரே சொன்னார். ஆதிமூலம் பாங்கியில் கணக்கராக வேலை பார்க்கிறாராம். அவர்கள் வீட்டிற்கு அவர் ஒரே பையன் தானாம். அவர் விதவைகளின் மறுமணத்தை விரும்பி ஆதரிப்பவராம.

நாட்கள் நடந்தன. எங்கள் உறவு, வளர்ந்தது.

என்னை அவரும், அவரை நானும் நன்றாகப் புரிந்து கொண்டோம். எங்கள் இருவரையும் என் அத்தை நன்றாகப் புரிந்து கொண்டார்.

பிறகு என்ன? வீணாக வளர்த்துவானேன்?

வீட்டிற்கு எழுதி என்னை விரைவில் திருமணம் செய்துகொள்வதாக வாக்களித்தார். மறுநாள் வீட்டிற்கு எழுதியிருக்கிறேன், பதில் வந்ததும் சொல்லுகிறேன் என்றார். அப்புறம்... அப்புறம.

கடந்த இரண்டு வாரங்களாக அவரைக் காணோம். ஏன்? எங்கே போனார்? அவருக்கு என்ன ஏற்பட்டது? என்று அறிய என் உள்ளம் புழுவாய்த் துடித்தது. என்னையும் அவரையும் பற்றி ஊர், நாக்கூசாமல் ஏதேதோ உளறிக்கொட்டியது! அடுத்தவர்களைப் பற்றி வம்பு பேசி ஆனந்தப்படுவதற்கென்றே அவதரித்துள்ள சில திருக்கூட்டங்கள் அவனியிலே இன்னும் உலவிக் கொண்டுதானே இருக்கின்றன. பம்பாயாயிருந்தால் என்ன, பரமக்குடியாயிருந்தால் என்ன?

பேசுபவர்கள் பேசிவிட்டுப் போகட்டும்! எனக்கு அவரைப்

— 11-ம் பக்கம் பார்க்க —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 7 | 29-10-'60 | இதழ் 20

காய்ச்சல் ஏறுகிறது !

"பலமான காய்ச்சல் !"

"யாருக்கு ?"

'அவர் இவர் என்று பெயர் சொல்லமுடியாது. ஏனென்றால் ஒருவருக்கு மட்டும் காய்ச்சல் அடிக்கவில்லை. ஆயிரக்கணக்கான பேர்களுக்கு அடிக்கிறது."

"அப்படியானால் ஓட்டுவான் ஓட்டியோ ? புளுவா, நிமோனியாவா ?"

புளு, நிமோனியா எல்லாம் சில நாட்கள் இருந்து நீயா நானா என்று பார்த்துவிட்டுப் போய்விடும். ஆனால், இந்தக் காய்ச்சல் 1962-ஆம் ஆண்டு வரை நீடிக்கும். அதன் பிறகுதான் ஆளைச் சாய்க்குமா, சாய்க்காமல் போகுமா என்று சொல்லமுடியும்.

காங்கிரசுக்காரர்களுக்குப் பிடித்திருக்கிற இந்தக் காய்ச்சலுக்குப் பேர் தேர்தல் காய்ச்சல் என்பதுதான்.

தேர்தல் நெருங்க நெருங்கக் காய்ச்சலின் வேகம் அதிகரித்துக்கொண்டே போகிறது ! தேர்தல் வந்து அதன் முடிவில் பட்டென்று உயிர்போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

காய்ச்சல் வந்தவர்களுக்கு வாய் கசக்கும்—இது அனுபவ உண்மை. இப்போது காங்கிரஸ்காரர்களுக்கு வாழ்க்கையே கசக்க ஆரம்பித்துவிட்டது. எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் நாங்கள் அவர்களோடு சேருவோம், இவர்களோடு சேருவோம், ஒன்று சேருவோம் காங்கிரசைக் கொன்று போடுவோம் என்று பேசுவதைக் கேட்கும்போது இனிக்கவா செய்யும்?

பலமான காய்ச்சலால் பாதிக்கப்பட்டவனுக்கு உயிர் போவதுபோல் இருக்கும்: சாவு தன்னை நெருங்கிவிட்டதுபோல் தோன்றும்; கொஞ்சம் மூட நம்பிக்கையுள்ளவனாக இருந்தால், இயமதரும மகாராசன் பாசக்கயிற்றை வீசிக்கொண்டு எருமைக்கடாவில் ஏறிவருவதுபோல்தோன்றும். அடுக்கடுக்காய்த்தான் செய்த தீவினைகளும் பாவங்களும் மனக்கண் முன்னே தோன்றி மனச்சாட்சியை வதைக்கும். அதுபோலத்தான் காங்கிரசுக்காரர்களுக்கு இப்போது மனம் பதை பதைக்கத் தொடங்கியிருக்கிறது.

காங்கிரசுக்காக வெட்டப்பட்டிருக்கும் குழி அவர்கள் கண்முன்னே தெரிகிறது. யாராரோ தங்களைப் பிடித்து அந்தக் குழியில் தள்ளி மூட ஒன்று சேருவது நன்றாகத்—தெளிவாகத் தெரிகிறது தங்கள் ஆட்சியின் பயனாய் ஏற்பட்ட பட்டினிச்சாவுகள், கள்ளத்தோணிச் சாவுகள், தற்கொலைச் சாவுகள் எல்லாம் அவர்கள் கண்முன்னே தோன்றி மனச்சாட்சியை வதைக்கத் தொடங்கிவிட்டன. ஆனால், சாகப்போகிறவன் சங்கரா சங்கரா என்பதுபோல், நாங்கள் எவ்வளவோ வசதிகளை உண்டாக்கியிருக்கிறோம். அப்படியிருக்கும்போது ஏன் இப்படி மக்கள் தற்கொலை செய்துகொண்டு சாகிறார்கள் ? என்று பேசித் தாங்கள் பாவம் செய்யாதவர்கள் என்று தங்கள் மனச்சாட்சியையே ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

பலமான காய்ச்சல் வந்தவர்களுக்குத் தன் நினைவு இருப்பதில்லை. சில சமயம் என்ன பேசுகிறோம், என்ன செய்கிறோம் என்றுகூடத் தெரியாது. அதுபோலத்தான், தேர்தல் காய்ச்சலுக்களான காங்கிரசு அமைச்சர்களும் இப்போது என்ன பேசுகிறோம் என்ன சொல்லுகிறோம் என்று தெரியாமல் கன்னா பின்னா வென்று எதையெதையோ உளறுகிறார்கள்.

காங்கிரசுக் காரர்களுக்கு முக்கியமான தொழில் தேர்தல் தான். அதுதான் பெரிய தொழில். அது, தானே ஒரு பெரிய தொழிலாக இருப்பதுடன், பல தொழில்களுக்கும் ஆதாரமாகவும் இருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிலில் இலாபம் இல்லையென்றால் காங்கிரசுக் காரர்கள் மனிதர்களாக இருப்பதில்லை. அந்தத் தொழிலில் பலத்த போட்டி இருக்கிறதென்றால் அவர்களால் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடிவதில்லை. எப்படியாவது தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்று அவர்கள் துடியாகத் துடிக்கிறார்கள்.

ஒவ்வொரு முறை தேர்தல் வரும் போதும் காங்கிரசுக் காரர்களின் நாடி பலமாகத் துடிக்கும், இப்போதோ அது ஒரு கட்டுக்கடங்காமல் துடிக்க ஆரம்பித்திருக்கிறது. இப்படித் துடிப்பது உயிருக்கு ஆபத்து என்று மருத்துவர்கள் கூறுவார்கள்.

எதிர்க்கட்சிகளின் பேச்சையும் போக்கையும் பார்த்தால் காங்கிரசுக் காரர்களுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. அதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்க்கும் போது காய்ச்சல் நடுக்கத்தோடு மனநடுக்கமும் சேர்ந்து கொண்டு காங்கிரசை வெட வெடவென்று நடுங்கச் செய்கிறது.

ஆச்சாரியார் காங்கிரசை எதிர்த்து முறியடிக்கப் போகிறேன் என்று சொல்லி வருகிறார். அவர் சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டும். காமராசரால் விரட்டப் பட்டவர்தானே! இனிமேலாவது அவர் நமக்கு எதிர்ப்பணி திரட்டப் போவதாவது? வயது முதிர்ந்து விட்டது, அறிவு குழம்பிவிட்டது, பிதற்றுகிறார் என்று சொல்லிச் சொல்லி ஆனந்தப் பட்டார்கள் காங்கிரசுக் காரர்கள்.

ஆனால், ஆச்சாரியார் இப்போது போட்டிருக்கிற அதிர் வேட்டு அவர்களுடைய ஆனந்தத்தை யெல்லாம் பறக்கடித்து ஆத்திரத்தை மூட்டி விட்டது.

"காங்கிரசை முறியடிக்க நான் தி. மு. க. வோடு கூட்டுச் சேருவேன் !" என்று ஆச்சாரியார் சொனனபிறகு காங்கிரசுக் காரர்களுக்கு இருதயம் படக் படக் கென்று வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டது.

சென்ற தேர்தலிலே தி. மு. க. எடுத்த எடுப்பிலேயே பதினைந்து இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது. இன்னும் பிடிக்காத இடங்களிலும் வாக்குக் கணக்கில் அப்படியொன்றும் அதிகமான குறைவு அல்லது வேற்றுமையில்லை. திடுதிப் பென்று தேர்தலில் குதித்த கட்சி இப்படி எடுத்த எடுப்பிலேயே பதினைந்து இடங்களைப் பிடித்து விட்டதே யென்று வியந்து திகைத்துப் போனார்கள் காங்கிரசுக் காரர்கள். ஆனால், பதினைந்து தானே--நாம் நூற்றியைம்பது அல்லவா என்று திரும்பிப் பார்த்துக் கொண்டு மனத்தைத் தேற்றிக் கொண்டார்கள்.

நகரசபைத் தேர்தல் வந்தபோது, மக்கள் சரியான தீர்ப்பு வழங்கினார்கள். காங்கிரசிடம் தங்களுக்குள்ள அவநம்பிக்கையைத் தெளிவாகக் காட்டிக் கொண்டார்கள். அதன் பயனாக, இன்று நகரசபை நிர்வாகம் காங்கிரசுக்கு இனித் திருப்பக் கிடைக்காது என்று சொல்லத் தக்க வகையில் தி. மு. க. விடம் சேர்ந்திருக்கிறது.

இப்போது மீண்டும் 1962-ல் பொதுத் தேர்தல் வரவிருக்கிறது. தி. மு. க முன்னைக் காட்டிலும் அதிகமாக வலுப் பெற்றிருக்கிறது. இதோ விழுந்துவிட்டது, அதோ விழுந்துவிட்டது என்று காங்கிரசுக் காரர்கள் சொல்லிய போதெல்லாம், தி. மு. க. புதிய வலிவோடும் வனப்போடும் தலை தூக்கிப் பொலிவாக நிற்கின்றது.

தி. மு. க. வை நடுநாயகமாகக் கொண்டு காங்கிரசுக்கு எதிர்ப்பாகத் தேர்தலில் ஒரு கூட்டணி இயங்கினால் நிச்சயமாகக் காங்கிரசைக் கவிழ்த்து விடலாம் என்று மற்ற கட்சிகள் எல்லாம் ஒருமுகமான கருத்தைத் தெரிவித்திருக்கின்றன.

அரசியல் அரங்கிலே நிகழப்போகும் எதையும் எப்பொழுதும் முன்னாலேயே சொல்லிவிடக்கூடிய இயல்புடைய ஆச்சாரியார், இப்போது தி. மு. க. வுடன் கூட்டுச் சேருவதற்கு முன்னோடியாக வந்திருப்பதுதான் காங்கிரசுக்கு உள்ள காய்ச்சலை அதிகப்படுத்தியிருக்கிறது.

காங்சுரசுக்காரர்களுக்கு தி. மு. க. வைப் பார்க்கும்போது காலனைப் பார்ப்பதுபோல் இருக்கிறது. அந்தக் காலனிடமிருந்து தப்புவதற்குத்தான் இப்போதே ஊருக்கு ஊர் காலிகளையும் கூலிகளையும் ஏவிவிட ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதனால் தி. மு. க. தோழர்கள் அஞ்சிப் பதுங்கிவிடப் போவதில்லை. காங்கிரசின் எண்ணமும் நிறைவேறப் போவதில்லை.

கழகத் தோழர்களை வெட்டுவதாலும் குத்துவதாலும் கொலை செய்வதாலும், காங்கிரஸ் நிலைநிற்க முடியும் என்று நம்பிக் கொண்டிருக்குமானால், அதன் பைத்தியக் காரத் தனத்தைக் கண்டு மக்கள் பரிதாபப் பட மாட்டார்கள். அதைக் குழிதோண்டிப் புதைக்கவே முன்வருவார்கள்.

காய்ச்சல் வேகத்தில் பிதற்றிக்கொண்டிருக்கும் காங்கிரசுக்காரர்களுக்கு இந்தத் தெளிவுரை உள்ளத்தில் பதியும் என்று நாம் நினைக்கவில்லை.

நல்லின்பம் சேர்க்கவரும்

நவம்பர் முல்லை.

கவிதைகள்

நாளைய செல்வம்
—கண்ணதாசன்.

பாடுக வண்டே!
—நாரா நாச்சியப்பன்.

துணிந்தாள் இல்லை!
—தமிழ்ப் பித்தன்.

கதைகள்

சோளக் காட்டு அழகி
—எம். எஸ். இராமசாமி.

பிரேத பரிசோதனை
—ந. தாமோதரன்.

படிக்காதவள்
—[illegible]ங்கவேலர்.

கட்டுரைகள்

நெப்போலியன் காதல்
—நாகநாதன்.

அருமைத் திருக்குறள்
—பன்னை. சண்முகம்.

கெண்டை மீன் கொண்ட பயம்
—ருக்மணி இராமனுதன்.

இன்னும் பலப்பல !
சிறப்புப் பகுதிகள் !

இத்தனைக்கும் விலை 25 புதுக்காசுகள்

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடியவர்கள் விண்ணப்பிக்க :—

முல்லை சென்னை-6.

சிறுகதை

சிதம்பர ரகசியம்

மு. கணபதி.

அன்றைய செய்தித் தாள்களில் பி. எஸ். சி. பரிட்சையின் முடிவு வெளி வந்திருந்தது. தாமரைச் செல்வி எவ்வளவுதான் துருவித் துருவிப் பார்த்தும் அவளுடைய 'எண்' மட்டும் பத்திரிகையில் வரவில்லை.

அவளுக்குத் தலை சுற்றியது வீடும் சுற்றியது இந்த உலகமே சுற்றுவதுபோலிருந்தது. மயக்க முற்று அப்படியே படுக்கையில் சாய்ந்தாள்.

"கவலைப்படாதே செல்வி! இந்த ஆண்டு இல்லாவிட்டால், அடுத்த ஆண்டு நிச்சயம் தேறிவிடுவாய். இதற்காகக் குடி முழுகிவிட்டதைப் போன்று கவலைப்படுவது" தாமரைச் செல்வியின் தந்தை மில் முதலாளி உலகநாதன் எவ்வளவோ சொல்லியும் அவள கேட்கவில்லை.

வெந்த உள்ளத்தில் வேல் பாய்ச்சியதைப்போல் அவளுடைய கல்லூரித் தோழியர்கள் ஒவ்வொருவராகத் தொலை பேசிமூலம் பேச ஆரம்பித்தார்கள்.

"என்னடி உன்னுடைய நம்பர் பேப்பரில் வரவில்லையே"

"மிகவும் வருந்துகிறேன் செல்வி! நீ பெயிலாகிவிடுவாயென்று நான், ஏன்? நம் கல்லூரியில் ஒருவர்கூடக் கனவு கண்டிருக்க முடியாது"

"நீ எப்படியடி பெயிலாகிவிட்டாய்?"

"கவலைப்படாதே செல்வி! அடுத்த ஆண்டு நிச்சயம் நீ பாசாகிவிடுவாய்"

இப்படிப் பல கேள்வி அம்புகள் அவள் உள்ளத்தைத் துளைத்தன. அன்று முழுவதும் அவள் சாப்பிடவில்லை. பைத்தியம் பிடித்தவளைப்போல் இங்குமங்கும் மாடியில் உலாவிக்கொண்டிருந்தாள். அன்று மாலை ஆறுமணிக்கு மிருகக்காட்சி சாலைக்குச் சென்றாள். எல்லா மிருகங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டுக் கடைசியில் சிங்கத்தின் கூண்டுக்கருகில் வந்து நின்றாள்.

சிங்கம் கூண்டுக்குள் அங்குமிங்கும் நடைபோட டுக்கொண்டிருந்தது. சிங்கக் கூண்டை ஒரு முறை சுற்றிப் பார்த்தாள்; தாமரைச்செல்வி. கூண்டின் ஒரு மூலையில் இரும்புக் கம்பி ஒன்று துருப்பிடித்துப் பிடி விட்டுப்போய் இலேசாக வளைந்திருந்தது. அந்தக் கப்பியை இலேசாக வளைத்தால் ஒரு ஆள் உள்ளே புக முடியும். அதைப் பார்த்ததும் அவள் முகத்தில் ஒருவித மகிழ்ச்சி தோன்றியது. சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தாள். ஒருவரும் கண்ணுக்குத் தென்படவில்லை.

மடமடவென்று சென்று, தன் பலம் கொண்டவரை அந்தக் கம்பியை வளைத்தாள் கம்பி வளைந்துகொண்டது. உள்ளே புகுந்து, சிங்கத்தின் முன் சென்று 'என்னைக் கொன்று விடு. என்னைக் கொன்று தின்றுவிடு' என்று ஆவேசத்துடன் கூறிக்கொண்டே சிங்கத்தின் முன் விழுந்து விட்டாள்.

சிங்கம் அப்படியே அவளைத் தூக்கிக் கொண்டு, கூண்டின் பின்புறமுள்ள அறைக்குள் சென்று அவளைக் கீழே போட்டது அவளுக்கு உடலெல்லாம் வேர்த்திருந்தது கண்ணைத் திறந்து பார்த்தாள். எதிரில் சிங்கம் உட்கார்ந்திருந்தது.

'அய்யோ அம்மா சிங்கம்! என்னைக் காப்பாற்றுங்கள். என்னைக் காப்பாற்றுங்கள். தெரியாமல் வந்து அகப்பட்டுக்கொண்டேன்' என்று கதறினாள்.

சிங்கம் அவளுடைய வாயை மூடியது. அதுமட்டுமல்ல 'சத்தம் போடாதே'என்று பேசவும் செய்தது.

அவளுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது.

சிங்கம் தலையில் மாட்டியிருந்த 'சிங்க முகமூடி'யையும், உடம்பில் போட்டிருந்த சிங்கத்தைப் போன்ற உடைகளையும் கழற்றித் தனியாக வைத்தது. என்ன அதிசயம்!

சிங்கத்திற்குப் பதிலாக ஒரு இளைஞன் அல்லவா அங்கே நிற்கிறான். 'இதென்ன வேடிக்கை!' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் தாமரைச் செல்வி. 'வேடிக்கையுமல்ல! விளையாட்டுமல்ல! இது ஒரு பெரிய வேதனை! என் பெயர் சிதம்பரம். இந்த மிருகக் காட்சி சாலையில் வேலைக்கு ஆள் தேவை என்று விளம்பரப்படுத்தியிருந்தார்கள். நான் பி. ஏ. வரை படித்திருக்கிறேன். ஆகையால் வேலைக்கு மனுப் போட்டிருந்தேன். உடனே வரும்படி பதில் வந்திருந்தது. எண்பது ரூபாய் சம்பளத்திற்கு வேலையை ஒப்புக் கொண்டேன். என்ன வேலையென்று தெரியுமா? இந்தக் கூண்டிலிருந்த கிழட்டுச் சிங்கம் திடீரென்று இறந்து விட்டது. அதனுடைய தோலை உரித்து அதனுள் பஞ்சை அடைத்து உரை தைத்து வைத்திருக்கிறார்கள். வேறு சிங்கம் வாங்கும்வரை நான் இந்தச் சிங்க உரையை மாட்டிக் கொண்டு இந்தக் கூண்டில் காலையிலிருந்து மாலைவரை உலவிக் கொண்டு இருக்க வேண்டும். பல மாதங்களாக வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். எனக்கு இருக்கும் ஒரே தாயாரை நான் எப்படியும் காப்பாற்றி ஆக வேண்டுமல்லவா? அதற்காக இந்த வேலையை ஒப்புக்கொண்டேன்."

"அட பாவமே!" செல்வி ஆயாசப் பட்டாள்.

"போகட்டும்! நீங்கள் ஏன் தற்கொலை செய்துகொள்ள முனைந்தீர்கள்?"

"அதுவா, பி. எஸ். சி. பரீட்சையில் தோல்வி யடைந்துவிட்டேன். அதற்காக மனம் உடைந்து தற்கொலை செய்துகொள்ளலாமென்று இங்கே வந்தால்" அவள் சிரித்தாள். அவனும் சிரித்தான்.

அவள் தன்னை வீட்டில் கொண்டு வந்து விடும்படி சொன்னாள். இப பொழுது கதவுகளெல்லாம் மூடப் பட்டிருக்கும். விடிந்ததும் நான்கு மணிக்கெல்லாம் போய்விடுங்கள் என்று அவன் எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை.

கூண்டை விட்டு அவன் வெளியில் சென்றால் அவனை வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள் என்று எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை.

இருவரும் இருட்டில் புறப்பட்டார்கள். பயந்து, பயந்து பதுங்கிப் பதுங்கிச் சென்றார்கள். பயத்தால் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டே செல்வி பின் தொடர்ந்தாள்.

வேலி ஓரத்தை அடைந்ததும், அவன் வேலியின் மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு அவளையும் தூக்கி உட்கார வைத்தான். பிறகு அவன் வெளியில் குதித்தான். 'நான் பிடித்துக்கொள்கிறேன் நீங்கள் குதியுங்கள்' என்றான் அவன்.

அவள் குதித்தாள். அவன் இரு கைகளாலும் தாங்கிக் கீழே இறக்கி

விட்டான். சிறிது தூரம் சென்று 'டாக்சி' ஒன்றைப் பிடித்துகொண்டு தாமரைச் செல்வியின் வீட்டை அடைந்தார்கள்.

தாமரைச் செல்வியைக் காணாததால் ஒரே 'பரபரப்'பாக விருந்த வீடு, அவள் வீட்டிற்குள் நுழைந்ததைக் கண்டதும் ஒரே ஆரவாரமாக மாறியது. அத்துடன் அவள் சிங்கத்திடம் அகப்பட்டுத் தப்பி வந்த செய்தியைக் கூறியதும் எல்லோரும் 'இடி இடி'யென்று சிரித்தார்கள். வீடே அமர்க்களப்பட்டது

சிதம்பரத்தை ஒருவரும் கவனிக்கவில்லை. "நான் போய் வருகிறேன்" என்ற சிதம்பரத்தின் குரலைக் கேட்டுத்தான் எல்லோரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள.

"அடடே! எல்லாரும் உன்னை மறந்துவிட்டார்களா! நல்ல வேடிக்கை! உட்காரப்பா இப்பொழுது என்ன அவசரம்? விடிந்தால் போகலாம். நீ செய்த உதவிக்கு நான் என்ன சொல்வது-என்ன செய்வது-எப்படி உன்னை பாராட்டுவது-என்று ஒன்றும் புரியவில்லை'யென்றார் உலகநாதன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தவாறு.

"இப்பொழுது என்ன அவசரம்? காலையில் போகலாம்" தாமரைச் செல்வி குழையக் குழையப் பேசினாள்.

"முடியாது! இப்பொழுதே போய் ஆக வேண்டும். நான் வெளியில் வந்தது அதிகாரிகளுக்குத் தெரிந்தால் என்னை வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள். மேலும் பொய்ச் சிங்கத்தைப்பற்றிய இரகசியமும் ஒருவருக்கும் தெரியக்கூடாது. தெரிந்தால் மிருகக் காட்சிசாலையின் பெயர் கெட்டுவிடும்," சிதம்பரம் ஒரே பிடிவாதமாகப் புறப்பட்டான்.

ஆனால், தாமரைச்செல்வி விடுவதாகயில்லை. இருந்துவிட்டுத்தான் போக வேண்டு'மென்று அவள் ஒரே பிடிவாதமாகத் தடுத்தாள். வேறுவழியில்லாததால் அங்கேயே தங்கிவிட்டான் இரவுச் சாப்பாட்டையும், காலை ஆகாரத்தையும் இருவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். அப்படிச் சாப்பிட்டதில் தாமரைச் செல்வி அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது.

மறுநாள் காலை சுமார் ஒன்பது மணிக்கு உலகநாதன் காரில், சிதம்பரமும், தாமரைச்செல்வியும் புறப்பட்டார்கள். காரைத் தாமரைச் செல்வியே ஓட்டினாள். கார் மிருகக் காட்சி சாலையை நோக்கி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. அதைவிட வேகமாகச் சிதம்பரத்தின் சிந்தனை சிறகடித்துப் பறந்து சென்றது,

(9-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி காமகோடி பீடம் ஜகத் குரு ஸ்திரி சங்கராச்சாரிய ஸ்வாமிகளுக்கு

வெளிப்படை ஸ்திரிமுகம்.

அடிகள்! வணக்கம்.

தாங்கள் தீபாவளி பற்றி விடுத்த 'ஸ்திரி முகம்' கல்கியின் தீபாவளி மலருக்குள் இடம் பெற்றதுடன் தொடர்ந்து அடுத்த இதழிலும் இடம் பெற்றிருப்பது கண்டு, பெரிதும் நாணத்துடன் இம்மடலை விடுக்கத் துணிந்தேன்.

நரகாசுரன் கதை தெரியுமா? தங்களுக்குத் தெரியாதென்பதே என்னுடைய திடமான நம்பிக்கை! புராணங்கள் சொல்வதென்ன:—

வைகுந்தத்தில் திருமால், மனைவியுடன் பட்டப்பகலில் காமப்போர் நடத்திக்கொண்டிருந்தார். அப்போது திருமாலைக் காண முனிவர்கள் சிலர் வந்தார்கள். வைகுந்த வாசலில் காவலிருந்த துவாரபாலகர் இருவர் திருமாலின் லிங்க ஆராதனையை சொல்லி உள்ளே செல்ல விடாமல் தடுத்தனர்,

இதனல் வெகுண்ட முனிவர்கள், துவாரபாலகர் இருவரையும் அரக்கர்களாகும்படி சாபம் கொடுத்தனர். பின்னர், துவாரபாலகர் வேண்டுதலுக்கிணங்க திருமாலின் பகைவர்களாக இருந்து திருமாலினல் கொலையுண்டு சாபநிவர்த்தி பெறுவீர்கள் என்று பிரதி சாபம் அளித்தனர்.

அதன்படி கிருத யுகத்தில் துவாரபாலகர் இருவரும் இரண்யன் இரண்யாட்சன் என்ற அசுரர்களாகத் தோன்றினர்கள்.

இரண்யாட்சன் பூமியைச் சுருட்டி எடுத்துக் கொண்டு கடலில் ஒளிந்தான். அது தான் ஆதிமனுவின் காலம்—ஆதிமனுவாந்தரம் என்று புராணம் கூறுகிறது.

மனுவின் வேண்டுகோட்கிணங்க திருமால் பன்றி உருவத்துடன் கடலில் நுழைந்து இரண்யாட்சனுடன் போரிட்டுக் கொன்று பூமியை மீட்டினர்.

அவ்வாறு பூமியை மீட்டி வரும்போது திருமால்பன்றியின் ஸ்பரிச உணர்ச்சியினல் பூமிக்கு காம வெறி கிளம்பிற்று. பன்றியும் பூமியும் புணர்ந்தன அதன் பயனக ஒரு குழந்தை பிறந்தது. அதுவே நரகாசுரன்.

அந்த நரகாசுரன் காம ரூப தேசத்தை பிராக் சோதிசபுரம் என்ற தலை நகரிலிருந்து ஆட்சி செய்தான், அவனுக்கு பகதத்தன் என்ற மகனும் 10,000 மனைவியரும் இருந்தனர். பலமிக்க கோட்டை கொத்தளங்களும் இருந்தன.

மாகிஷ்மதி என்ற துணைத் தலை நகரும் இருந்தது. ஆற்றல் மிக்க பெரும்படையும் அசகாய சூரர்களான தளபதிகளும் இருந்தனர். அவனுக்கொரு தம்பியும் இருந்தான்.

மொத்தத்தில் நரகாசுரன் வலிமை வாய்ந்த பேரரசனக இருந்தான்.

இன்றைய அசாம் ராஜ்யமே அன்றைய காம ரூப தேசம்: இன்றைய நருமதை ஆற்றின் வடகரையின் ஒரு பகுதியே அன்றைய மாகிஷ்மதி இருந்த இடமாகும்.

இத்தகைய நரகாசுரன் காசிப முனிவனின் மனைவி அதிதியின் காதணிகளை கைப்பற்றிக் கொண்டானும்! இந்திரனின் சிம்மாசனத்தை அபகரித்துக் கொண்டானும்! வருணனுடைய குடையை (சத்திரம்) பிடுங்கிக் கொண்டானும்!

இதைக் கேள்விப்பட்டாராம் கிருட்டிணன். அப்போது கிருட்டிணன் மதுரையில்—(மதுரா என்று சொல்லப்படுவது பம்பாய்க்கு வடக்கிலிருப்பது) ஆட்சிபுரிந்தவர் நரகாசுரனை ஒழிக்க வேண்டுமென்று சதுரங்க சேனையுடன் புறப்பட்டாராம்.

பிராக் சோதிசபுரம் கண்ணனுடைய படைகளால் முற்றுகையிடப்பட்டது. நரகாசுரன் படைகளும் கண்ணனுடைய படைகளும் ஒன்றை யொன்று தாக்கின. நரகாசுரனுக்கும் கண்ணனுக்கும் நேருக்கு நேர் போர் நடந்தது.

அப்போது நரகாசுரன் தண்டாயுத்தால் கண்ணனை அடித்தான். அந்த அடியை தாங்க முடியாமல் கண்ணன் மூர்ச்சையானர்.

பின்பு கண்ணனின் சாரதியாக இருந்த அவருடைய மனைவிகளில் ஒருத்தியான சத்தியபாமை என்பவள் நரகாசுரனுடன் போர் செய்து இரவு 3-ம் சாமத்தில் கொன்றாள்.

அருப்பைக் கிழார்

நரகாசுரன் குற்றுயிராக இருந்த போது சத்தியபாமையிடம் "தான் இறந்த நாளைக் கொண்டாட வேண்டும்" என்று, வரம் வாங்கினன்.

நரகாசுரன் இறந்த பிறகு பிராக் சோதிசபுரம் கண்ணனுடைய சேனைகளால் கொள்ளையிடப்பட்டது. நரகாசுரன் மனைவியர் 10,000 பேரும் கண்ணனல் சிறை பிடிக்கப்பட்டு மனைவியாக்கப்பட்டனர். தேவர்கள் மகிழ்ந்து பூமாரி செய்தனர்.

அடிகள்!

இந்தக் கபோதிப் புராணத்தில் நீங்கள் சொல்கிற 'புனிதம்' என்ன இருக்கிறது?

பூமி சுருளும் பொருளா?

பூமியை சுருட்டிக் கொண்டு இரண்யாட்சன் ஒளிந்த கடல் எங்கே? பூமிக்கு வெளியில் இருந்ததா?

நரகாசுரன் பொது மக்களுக்கு துன்பம் செய்ததாக இல்லை!

நரகாசுரன் அதிதியின் காதணியை எப்படி—எதற்காக கவர்ந்தான்? புராணத்தின் விளக்கமில்லை! அவன் வழிப்பறி செய்பவனு?

வருணனுக்கு குடை இருந்ததா? இருந்தால்—மழைக்கா வெயிலுக்கா? வருணன் கடலின் அதிபதி என்பது தெரியுமா? இந்திரன் சிம்மாசனம் எது?

இவைகளைக் கவர்ந்தது மாபெரும் குற்றமாஞல் பிராக் சோதிசபுரத்தைக் கொள்ளையிட்டதும், நரகாசுரன் மனைவியர் 10,000 பேரை சிறைபிடித்து மனைவியாக்கிக் கொண்டதும் எத்தகைய குற்றமாகும்? இது கடவுள் அவதாரத்தின் செயல் என்று நெஞ்சார—அறிவார சொல்வீரா?

அடிகள்!

மகாபாரத்தில் வரும் எதிர் ரோமமுள்ள வீரர்களில் ஒருவராகக் கண்ணன் போற்றப்படுகிறர். அத்தகைய வீரர் நரகாசுரனுடைய தண்டாயுதத் தாக்குதலைத் தாங்க முடியாமல் மூர்ச்சை அடைகிறர்.

பின்புதான் பாமை நரகனுடன் போர் செய்கிறள் மூர்ச்சையான கண்ணன் கடைசி வரை — நரகாசுரனுக்குப் பாமை வரமளிக்கும்போதுகூட--எழுந்தாக புராணத்தில் இல்லை.

அத்தனை பலசாலியான நரகாசுரனுடன் பாமை இரவு 3-ம் சாமத்தில் (இரவு 12 மணிக்கும் 3 மணிக்கும் இடையில்) என்ன விதப் போர் செய்து கொன்றள்? புராணத்தில் விளக்கமில்லை என்றலும் ஊகித்துக் கொள்ளலாம்.

அடிகள்!

நரகாசுரனுடைய வரலாற்றை, புராணங்கள் கூறுவதிலிருந்து கண்ணனை விட அவன் எல்லாவிதத்திலும் மேலானவன் என்று தோன்றுகிறதா இல்லையா? கண்ணனைத் தெய்வம் கடவுள் அவதாரம் என்பது கேலிக்கூத்தாகத் தோன்றவில்லையா?

கண்ணன் கடவுள் என்றல், நரகனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்திருக்கலாமே! நல்ல புத்தி கொடுக்காத கடவுள் 'சர்வக்ஞன்' ஆவது எப்படி?

கடவுளர் அவதாரங்களால் பிறந்தவர்களும் கொல்லப்பட்டவர்களும் பூர்வ சாபம் பெற்றவராக இருக்கவேண்டுமே! நரகாசுரனுடைய பூர்வம் என்ன? பூர்வசாபம் என்ன? ஒன்றுமில்லையே! ஏன்?

நரகாசுரன் கிருதயுகத்தில் பிறந்து துவாபரயுகத்தில் கொல்லப்பட்டான்! இத்தனை காலம் எப்படி உயிருடன் இருந்தான்?

வரம் பெற்றிருப்பான் என்றல், அவனுக்கொரு தம்பியும் இருந்திருக்கிறன் துவாபரயுகம் இறுதிவரை! அவன் எப்படி இருந்தான்? யாருக்குப் பிறந்தான்?

புராணத்தில் விளக்கமில்லை! சோமச் சாற்றுப் போதையில் புராணம் எழுதினர்களோ?

அடிகள்!

'மதம்' என்றல், அறிவையும் நல்லொழுக்கத்தையும், வளர்ப்பதாக இருக்க வேண்டாமா? புராணங்களிலும் இதிகாசங்களிலும் இவைகள் இருக்கின்றனவா?

சாதி பேதங்கள் நீங்கி மக்கள் யாவரும் சரி நிகர் சமமாக வாழ்வதற்கு தீபாவளிப் புனித தினமும் அதற்கு ஆதாரமான புராண இதிகாசங்களும் பயன்படுமா?

நீங்கள் இதையெல்லாம் எங்கே சிந்திக்கப் போகிறீர்கள்!

பண்டைக்காலத்தில் கொற்றக் குடை நிழலில் வெற்றி முரசதிர வீற்றிருந்த முடிமன்னர்கள் தங்களைப் போன்ற உதவாக்கரைகளை மதத்தின் காவலராக நியமித்து, உழைக்காமல் களைக்காமல் உண்டுகளிக்க முற்றூட்டுகளும் பொற்குவைகளும் வாரி வழங்கினர்கள்.

அந்த அரசர்களும் அவர்களின் கொற்றமும் வெற்றியும் அற்று விழாதபடி போர்க்களங்களில் வாளோடு வாளும் தோளோடு தோளும் மோத உயிரைப் பணயம் வைத்து செங்குருதி கொட்டி வெற்றிக் கொடி நாட்டிய வீரர்கள்-நீங்கள் சொல்வது போல் வீர சுவர்க்கம் அடைந்தனர்.

தங்களைப் போன்றவர்களுக்கு விருதுகளும் கொடிகளும் பொற்சிவிகையும் அளித்த மன்னர்கள் அனைவரும் பூண்டற்று போனர்கள்!

இப்போது நீங்கள் அந்த மாமன்னர்களை விட உயர்ந்த போக போக்கியங்களை துய்த்துச் செல்வத்தில் புரண்டு சிவிகையில் ஊர்ந்து வருகிறீர்கள்! நீங்கள் துய்ப்பது அத்தனையும் இந்த நாட்டின் செல்வம்! அதற்கு கைம்மாறு மடமையா?

இந்த நாட்டில் உணவும் உடையும் வாழும் வகையும் பெரும் பஞ்சமாக இருந்தாலும் மடமையாவது மலிவாக இருக்கட்டும் என்று கருதுகிறீர்களா?

படித்த-நிரக்ஷர குக்ஷிகளான-இராசன் பாபுக்களும்-இன்னும் பிராமணன் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமைப் படும் சில அறிவிலிகளும், தங்களின் ஊற்றைக் கால்களை கழுவிக் குடிப்பதனல் சகல ஞானமும் சகல மேம்பாடும் தங்களுக்கு இருப்பதாகக் கருதுகிறீர்களா?

"பங்கயாசனன்முதல்
பலதேவரும் பாருள
பெரியோரும்

கங்கை யாதியாம் தீர்த்தமும்
தேசமும் காலமும் மறை
நான்கும்

அங்க மாறுமந் திரங்களும்
முறைகளும் அசத்தியம்..."

இவ்வாறு வேதாந்தப் பாற்கடலில் திரட்டிய வெண்ணெய் என்று போற்றப் படும் கைவல்யம் சொல்கிறது:-

பிரமதேவன் முதலாக உலகிலுள்ள உங்களைப் போன்ற பெரியோர்கள் ஈருக-கங்கை முதலாக உங்கள் காஞ்சியிலுள்ள சுரகரீச தீர்த்தம் போன்ற தீர்த்தங்கள் ஈருக-பஞ்சாங்கத்தில் கண்ட ஐப்பசி மாத அபரபக்ஷ சதுர்த்தசி திதி போன்ற புண்ய காலங்களும் 'ரிக்' முதலாக சாமம் ஈருக

(10-ம் பக்கம் பார்க்க)

மல்லிகைப்

27. பொல்லாத இதயம் இது அம்மா!

மலர்க்கொடி பீச்ரோடு வழியாகக் காரை ஓட்டிக்கொண்டு சென்றாள். அப்போதுதான் அந்த நிகழ்ச்சி நடந்தது. அவர்கள் காரைக் கடந்து ஒரு மோட்டார் சைக்கிள் சென்றது. அதைக் கண்டவுடன் ராதா, தங்கத்தின் இடுப்பில் இடித்து, "தங்கம், அதோ பார்த்தாயா, உன் அத்தான் சுந்தரேசன்" என்று சுட்டிக் காண்பித்தாள். தங்கம் அந்த மோட்டார் சைக்கிள் பக்கம் தன் பார்வையைச் செலுத்தியபோதுதான் அந்த விபத்து நடந்தது. எதிர்ப்பக்கமாக ஒரு கார் வந்தது. ரோட்டைக் குறுக்கே கடந்து கொண்டிருந்த ஒருவன், அந்தக் காருக்குத் தப்புவதற்காக விலகினான். அதே சமயம், சுந்தரேசனுடைய மோட்டார் சைக்கிள் அந்த மனிதன் மீது பாய்ந்தது. அந்த மனிதன், மோட்டார் சைக்கிள் தன்னை மோதிய வேகத்தில் சுற்றிச் சுழன்று கீழே விழுந்தான். அவன் விழுந்ததைப் பற்றிச் சிறிதும் இலட்சியப்படுத்தாமல், சுந்தரேசன் வெகு வேகமாக மோட்டார் சைக்கிளை விட்டுக்கொண்டு சென்றுவிட்டான்.

தரையில் அந்த மனிதன் விழுந்த அதே நேரம் மலர்க்கொடியின் கார் அந்த இடத்தை நோக்கி வந்தது. நல்ல வேளை! மலர்க்கொடி அழுத்தமாக ஒரு பிரேக் போட்டுக் காரை அப்படியே சிறிது தூரத்திலேயே நிறுத்திவிட்டாள். இல்லாவிட்டால், கீழே விழுந்து கிடந்த அந்த மனிதன் மீது அவள் கார் ஏறியிருக்கும்.

அடிபட்டவன் அருகில் நின்றால், அகப்பட்டுக்கொள்ள நேரும் என்று பயந்துதான் சுந்தரேசன் வேகமாகச் சைக்கிளை விட்டுக்கொண்டு போய்விட்டான் என்று எண்ணினார்கள் அந்தப் பெண்கள். ஆனால், அருகில் வந்து கீழே யிறங்கி அடிபட்டுக் கிடந்த ஆளைப் பார்த்த பிறகுதான் சுந்தரேசன் அவ்வளவு வேகமாக ஓடியதன் பொருள் அந்தப் பெண்களுக்கு விளங்கியது. ஒருவேளை சுந்தரேசன் வேண்டுமென்றே கூட அந்த ஆளை அடித்துச் சாய்த்திருப்பானோ என்றுகூட எண்ணம் ஓடியது தங்கத்திற்கும் ராதாவிற்கும்.

காரை நிறுத்தியதும், மூன்று பெண்களும் விரைவாகக் கீழே ஓடி வந்து அடிபட்ட ஆளைக் கவனித்தார்கள். உடனே அந்த மூன்று பெண்களுக்கும் வியப்பும் திகைப்பும் அதிர்ச்சியும் ஆகிய உணர்ச்சிகள் ஒரே பட்டாக எழுந்தன.

"ஆ! நீங்களா?" என்று அலறினாள் மலர்க்கொடி.

"ஐயோ! நீங்கள்தானா?" என்று பதறினாள் தங்கம்.

"ஐயோ! உங்களுக்கா இப்படி நேரிட்டது?" என்று கூவினாள் ராதா.

அடிபட்டுக் கிடந்த மனிதனைக் கண்டதும் அந்த மூன்று பெண்களுக்கும் இதயத்தில் ஏற்பட்ட துன்பம் ஒரே மாதிரியாக இருந்தது. அந்த மனிதனை அவர்கள் மூவரும் அறிவார்கள்.

மலர்க்கொடி உடனடியாக அவனுடைய உடலைத் தூக்கித் தன் மடியில் கிடத்திக்கொண்டாள். அவள் கண்களிலிருந்து நீர் பொலபொலவென்று உதிர்ந்தது. இருப்பினும் அந்தக் கண்கள், அவனுக்கு எங்கே எந்த இடத்திலே அடி அல்லது காயம்பட்டிருக்கிறது என்று ஆராயத் தவறவில்லை.

அடிபட்டு விழுந்த அந்த மனிதனின் ஆசனப் பக்கத்தில் ஊமைக்காயம் ஒன்று ஏற்பட்டிருந்தது. வலதுமுழங்கை தரையில் அடிபட்டுத் தோல் உந்து காயம் ஏற்பட்டு இரத்தமும் சலமும் கசிந்து கொண்டிருந்தன. இடது கையோ—அதுதான் பார்க்கப் பொறுக்க முடியாத காட்சியாக இருந்தது. இடது கையில் மணிக்கட்டு அளவில் கை துண்டிக்கப்பட்டதுபோன்ற காயம். அந்த வெட்டுக் காயத்தினின்றும் இரத்தம் கொத கொதவென்று வடிந்து தரையை ஈரச் சிவப்பாக்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்டவுடனே, மலர்க்கொடியின் பதற்றம் மேலும் அதிகமாகியது. உடனே தன் சேலைத் தலைப்பைக் கிழித்து அந்த வெட்டுக் காயத்தில் சுற்றிக் கட்டினாள். பிறகு தங்கத்தை நோக்கி "தங்கம், இவரை நாம் உடனே மருத்துவ விடுதிக்குக் கொண்டு செல்ல வேண்டும். தூக்கிக் காரில் கொண்டு போய்க் கிடத்தலாமா?" என்று கேட்டாள்.

அடிபட்ட அந்த மனிதனோ தன்னுணர்வு அற்றுக் கட்டை போலக் கிடந்தான்.

தங்கம் அவனை உற்று நோக்க நோக்க அவளுக்குப் பலவிதமான குழப்பங்கள் ஏற்பட்டன. அந்த மனிதன் தான் தன்னை, காட்டுப் பிள்ளையார் கோயிலில் சுந்தரேசனிடமிருந்து மீட்டுக் காப்பாற்றியவன் என்று தங்கம் தெரிந்துகொண்டாள். அந்த மனிதன்தான் இராதாவும் முருகேச வாத்தியாரும் நெய்யூரில் காரில் இடங்கிடையாமல் திண்டாடிக்கொண்டிருந்தபோது இடங்கொடுத்தவன் என்று தெரிந்துகொண்டாள். அந்த மனிதன்தான் முதல்நாள் மலர்க்கொடி பாடிக்கொண்டிருக்கும்போது வந்து அவளுடைய கவனத்தை இழுத்தவன் என்றும் தெரிந்துகொண்டாள். ஆனால், இதற்கெல்லாம் முன்னால் - எல்லாவற்றுக்கும் முன்னால் அவனைத்தான் எங்கோ சந்தித்திருப்பதாக ஓர் உணர்வு மீண்டும் அவளுக்கு வராமல் இல்லை. அந்த உணர்வு இப்போது அவளுடைய உள்ளத்தில் புகுந்து ஒரு கற்பனையை உருவாக்கியது. அது இதுதான்!- மணிக்கட்டுக்குக் கீழே கையில்லாத அந்த நிலையில் உள்ள மற்றொருவனின் உருவம் அவள் மனக்கண்முன் தோன்றியது. அந்த உருவம்தான், முருகேச வாத்தியாரின் வளர்ப்புப் பிள்ளையாக இருந்த நடராசனின் உருவம். அந்த உருவத்துடன் இந்த இளைஞனை ஒப்பிட்டுப் பார்த்தாள் தங்கம். இரண்டும் ஒரேமாதிரியாக இருப்பது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது அவளுக்கு! இல்லை, அப்படியிருக்கமுடியாது என்று அவள் அறிவு வாதாடியது. நடராசனைப் பார்த்து எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன. அவன் உருவம் அவள் மனத்திரையில் மங்கலாகத்தான் தெரிந்தது. அந்த உருவம்போல இந்த இளைஞனும் இருக்கிறான் என்று அவள் எப்படி முடிவுகட்ட முடியும். ஆனால், கையளவிலே இருவரும் ஒரு நிலையில் தான் இருந்தனர். நடராசன் ஆரம்பத்திலிருந்தே கையிழந்தவனாகத்தான் அவளுக்கு அறிமுகமானான். ஆனால், இப்போது அடிபட்டுக் கிடக்கும் இந்த இளைஞனோ, இப்போதுதான் கையை இழந்திருக்கிறான். சைக்கிளில் அடிபட்டு அவன் கை எப்படியோ வெட்டுப்பட்டிருக்கிறது. இதற்குமுன் தான் பார்த்தபோதெல்லாம் அவனுக்குக் கையிருந்தது. ஆகவே, இவன் நடராசன் அல்ல. ஆனால், இவனை முன்னரே பார்த்திருப்பது போல் தனக்கு மீண்டும் தோன்றுவதற்குக் காரணம் என்ன? இது புரியாமல் தான் தங்கம் திகைத்துக் கொண்டிருந்தாள்.

மலர்க்கொடியின் குரல் கேட்டுத் தங்கத்தின் சிந்தனை பட்டென்று அறுந்தது. மலர்க்கொடி என்ன சொன்னாள் என்பதே அவள் காதில் விழவில்லை. ஆனால், அவள் தன்னை அழைத்தது மட்டும் தெரிந்தது. திடீரென்று தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவள் போல் அவள் பேசினாள்.

"மலர்க்கொடி, இவரை நாம் மருத்துவ விடுதிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால் என்ன?"

அந்த நேரத்தில் வீதியில் யாரும் இல்லை. ஆகவே பெண்கள் மூவரும் தாங்களாகவே தான் எல்லாம் செய்ய நேரிட்டது.

மூன்று பேருமாகச் சேர்ந்து அந்த இளைஞனைத் தூக்கிக் கொண்டு வந்து காரில் கிடத்தினார்கள். பிறகு, பின் சீட்டில் ஓர் ஓரமாக இருந்து அவனைக் கவனித்துக் கொள்ளும்படி ராதாவை இருக்கச் சொல்லி விட்டு தங்கமும் மலர்க்கொடியும் முன் பக்கமாக இருந்து கொண்டார்கள்.

மலர்க்கொடி, காரை யோட்டிக் கொண்டு சென்றாள்.

பெரிய மருத்துவவிடுதியில் கொண்டு போய், நடந்த விவரங்களைச் சொல்லி, அந்த இளைஞனை டாக்டர்கள் வசம் ஒப்படைத்தார்கள். ஆனால், சுந்தரேசன் பெயரை மட்டும் கூறவில்லை. தங்கம், மலர்க்கொடி, ராதா மூன்று பேருமே ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளாமலே, இந்த முடிவுக்கு வந்திருந்தார்கள். அடித்து வீழ்த்தி விட்டுப் போனவன் யாரோ தெரியவில்லை என்றே கூறினார்கள்.

அந்த மட்டுக்குச் சுந்தரேசன் தப்பினான். ஆனால், கடைசிவரை தன் அத்தான் சுந்தரேசன் அகப்பட்டுக் கொள்ளாமல் இருப்பானா என்று தங்கத்திற்குச் சந்தேகமாகவேயிருந்தது.

ஏனென்றால், அடிபட்டுஉணர்வற்றுக் கிடக்கும் அந்த இளைஞன் தன்னுணர்வு பெற்றுக் கண் விழித்ததும் என்னைத் தள்ளிச் சென்றவன் இவன் என்று சொல்லி விட்டால், சுந்தரேசன் மீது வழக்குத் தொடுக்காமலா விடுவார்கள்?

மருத்துவ விடுதிக்கு வந்து சேர்ந்த அரைமணி நேரத்திற்குப் பிறகு அந்த இளைஞன் கண் விழித்தான். விழித்த உடனே அவன் கண்ணுக்கு முதலில் மலர்க்கொடிதான் தெரிந்தாள்போலிருக்கிறது. தன் வேதனையையெல்லாம் மறந்து, "ஆ! மலர்க்கொடி! நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று முகத்தில் ஒளி மின்ன உற்சாகத்தோடு கேட்டான்.

"ஆம்! ராஜு!" என்று அதே ஆர்வத்தோடு பதிலளித்தாள் மலர்க்கொடி.

அவர்கள் இருவரிடையேயும் ஏற்பட்ட அந்த அன்பும் ஆர்வமும் கலந்த உரையாடலைக் கேட்ட தங்கத்திற்கு என்னவோ மாதிரியிருந்தது. அவன் கண்ணில் படாமல் விலகி நின்று கொள்ள முயன்றாள். ஆனால் அதே சமயம் அந்த இளைஞன், தங்கத்தைப் பார்த்துவிட்டான்.

"ஆ! நான் என்ன கனவு காண்கிறேனா? இதோ தங்கம், பக்கத்திலே அவர்களின் தோழி ராதா! மலர்க்கொடி, நான் காண்பதெல்லாம் உண்மைதானா?" என்று கேட்டான்.

"ஆ! இது தங்கம்தான்! இது ராதாதான்! இவர்கள் என் தோழிமார்கள். ஏன் இவர்களை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?" என்று கேட்டாள் மலர்க்கொடி.

அதற்கு அந்த இளைஞன் பதில் கூறவில்லை.

அவ்வளவு நேரமும் ஆழ்ந்த சிந்தனையோடு அந்த இளைஞன் முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த தங்கம் தன் பெயர் குறிப்பிடப்பட்டதும் திடுக்கிட்டுத் தன் சிந்தனையை விட்டு நிலையான தன்மைக்குத் திரும்பினாள்.

இந்தச் சமயத்தில் அங்கு வந்த நர்சு ஒருத்தி, மூன்று பெண்களையும் பார்த்து, "அம்மா, இனிமேல் நீங்கள் இங்கு இருக்கக் அடாது. பார்க்க வேண்டுமானால் நாளை மாலை நான்கு மணிக்கு மேல் வாருங்கள்" என்று புறப்படச் சொல்லி வற்புறுத்தினாள். மலர்க்கொடி வேண்டா வெறுப்பாக அந்த இளைஞனிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே நடந்தாள். தங்கமும் இராதாவும் நகரும் கற்சிலைகளைப்போல் அவளைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

வெளியில் வந்தபோது மலர்க்கொடியின் முகம் கூம்பிய தாமரையைப்போல் காட்சியளித்தது.

"தங்கம், இன்று நாம் புறப்பட்ட நேரம் சரியில்லை. அவருக்கு இந்த மாதிரி ஏற்பட்டு...பாவம் கை வேறு போய் விட்டது!" என்று தளதளத்த குரலில் கூறினாள் மலர்க்கொடி.

தங்கம் ஆற்ற முடியாத துயரத்தோடு மலர்க்கொடியை நிமிர்ந்து நோக்கினாள். ஆனால், அவள் எதுவும் வாய்த்திறந்து சொல்லவில்லை. சொல்லக் கூடிய நிலையில் அவள்

பந்தல்

நாரா நாச்சியப்பன்.



இல்லை. அவள் நெஞ்சகத்துக்குள்ளேதான் அப்போது எத்தனை யெத்தனை குழப்பம்!

காரில் ஏற்றிக் கொண்டு வந்து தங்கத்தையும் ராதாவையும் ஜமீந்தார் வீட்டில் இறக்கி விட்டுவிட்டுப் போனுள் மலர்க்கொடி. கார் மறைந்தவுடன் தங்கத்தை நோக்கி ராதா 'ஏன் தங்கம், அந்த ராஜுவும் நம்ம நடராசனும் ஒரே மாதிரியாக இருக்கிருர்கள் இல்லையா?' என்று கேட்டாள்.

"அப்படியா?" என்று திரும்பிய தங்கம், ராதாவை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். ராதாவின் உள்ளத்திலும் தனக்கேற்பட்டிருப்பது போலவே சிந்தனைக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டாள் தங்கம். உடனே, தங்கம் தன் உணர்ச்சிகளை மறைத்துக்கொண்டாள், ராதாவின் உள்ளக் கிடக்கையை அறிய வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

"அப்படியா? கைதான் இருவருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது. முகமுமா அப்படியிருக்கிறது?" என்று கேட்டாள் தங்கம்.

இந்த வார்த்தைகள் ராதாவின் உள்ளத்தில் சுருக்கென்று முள்ளைப் போல் தைத்திருக்க வேண்டும். இதைக் கேட்டதும் அவள் முகத்தில் எத்தனை வேதனையான சுளிப்புகள் ஏற்பட்டு விட்டன!

"தங்கம், மனிதர்களின் உடலில் உள்ள ஊனங்களால் அவர்களுடைய பெருமை குறைந்துவிடுவதில்லை. அவர்களுடைய உள்ளத்தின் நேர்மையே உயர்வையும் சிறப்பையும் உண்டாக்கும். அந்த உள்ளத்தின் தன்மை அவர்கள் முகத்திலே விளங்கித் தோன்றும். இந்த ராஜு, நடராசனைப்போல் உருவத்தில் மட்டுமல்ல உள்ளத்திலும் ஒற்றுமையுள்ளவர் என்பதை அவருடைய கள்ளங்கபடமற்ற முகமே நமக்குக் காட்டுகிறது. ஆனால், ஒரே ஒரு வேற்றுமை. நடராசன் முகத்தில் கபடமில்லாத அசட்டுத்தனத்தைக் கண்டிருக்கிறோம். இந்த ராஜுவின் முகத்தில் குறையில்லாத உறுதிப் பண்பு வெளிப்பட்டுத் தெரிகிறது!" என்று ராதா விவரித்தாள்.

"அப்படியானால், நடராசனைவிட இவர் சிறந்தவர் என்று சொல்லுகிருயா?" என்று கேட்டாள் தங்கம்.

"தங்கம், ஒரேமாதிரியான இரண்டு பொருள்களை வைத்துக் கொண்டு ஒன்றைவிட மற்றொன்று உயர்வு என்று எப்படித் தீர்மானிக்க முடியும்?" என்ருள் ராதா."

ஒன்றும் தெரியாத அசடைவிட உறுதிப்பண்புள்ள ஒருவர் உயர்ந்தவரில்லையா?" என்று கேட்டாள் தங்கம்.

'உனக்கு எப்போதும் நடராசனைப் பிடிக்காது!" என்ருள் ராதா.

"உனக்கு எப்போதும் நடராசனைத் தான் பிடிக்கும்!" என்று தங்கம் சொன்னவுடன் ராதாவின் முகத்தில் ஏற்பட்ட அந்த ஒளி-கதிரவனிடம்கூட இல்லையென்று சொல்லலாம்.

"நடராசனைப் பிடிக்கும்!" என்ற அந்தச் சொல்தான் அவள் இதயத்தில் எத்தனை மலர்ச்சியை உண்டாக்கி விட்டது. அந்த இதய மலர்ச்சியின் அடையாளமாக அவள் முகம்தான் எவ்வளவு விரிவாக மலர்ந்துவிட்டது. மலர்ந்த அந்த முகத்திலே நாணம் தோன்றியபோது அது எவ்வளவு அழகாகச் சிவந்துவிட்டது! ராதாவை அந்த நிலையிலேயே போட்டோப் பிடித்து வைத்திருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று தங்கம் எண்ணினுள்.

அவ்வளவு இன்பத்தை அந்த ஒரு வார்த்தை உண்டாக்கிவிட்டது.

ராதா நடராசன் மேல்கொண்டிருந்த தூய அன்பின் தன்மையைத் தங்கம் அப்போது மீண்டும் உணரும்படி நேரிட்டது.

மரகத அம்மாளின் வருகையால் அவர்களின் பேச்சு, அந்த மட்டோடு தடைப்பட்டுவிட்டது.

அன்று இரவு முழுவதும் தங்கத்திற்குத் தூக்கமே வரவில்லை. திரும்பத் திரும்ப அந்த இளைஞன் ராஜுவின் முகமே அவள் நினைவுக்கு வந்து நின்றது ஒருபுறம் ராஜுவின் முகம் அதையடுத்தாற்போல் இன்னொருபுறம் நடராசனின் முகம், இரண்டுக்கும் எவ்விதமான வேற்றுமையும் இருப்பதாகத் தெரியவில்லை. அதோ நடராசனின் அருகிலே ராதா வந்து நிற்கிருள். அதே சமயம் ராஜுவின் அருகிலே மலர்க்கொடி வந்துநிற்கிருள். ராதாவை நடராசன் தனது இடதுகையால் அணைத்துக்கொள்கிருன். மலர்க்கொடியை ராஜு தன் இடது கையினுல் அணைத்துக்கொள்கிருன். இரண்டு பேருடைய இடதுகையும் மணிக்கட்டுவரைதான் இருக்கின்றன. உள்ளங்கையுமில்லை விரல்களுமில்லை. ஆனுல், அந்த இரண்டு முகங்களிலேயும் தான் எத்தனை மலர்ச்சி அந்த இருவருடைய அணைப்பிலும் தான் அந்த இரு பெண்களும் எத்தனை இன்பம் காணுகிருர்கள். மலர்க்கொடியையும் ராதாவையும் பார்க்கும்போது தங்கத்திற்கு அவர்கள்மேல் பொருமையாக இருந்தது ஆகா! இரண்டு பேரும் தங்கள் இதயத்துக்குகந்த காதலர்களை அடைந்து எத்தனை சுகமாக, எத்தனை ஆனந்தமாக இருக்கிருர்கள். தனக்கு மட்டும்... அன்பு காட்ட யாருமில்லை. தன் காதல் மட்டும் ஏன் இப்படித் தோல்வியாகப் போக வேண்டும்.

அத்தான் சுந்தரேசன் அழகிலே குறைச்சலா, அறிவிலே குறைச்சலா, நாகரிகத்திலே குறைச்சலா? இருந்தாலும் தான் அவர்மீது கொண்ட காதல் ஏன் இப்படித் துன்பக்காதலாக முடியவேண்டும்? தான் தேர்ந்தெடுத்த அந்த அழகு சுந்தரேசர் ஏன் இன்னொருத்தியின் கணவராக இருக்க வேண்டும்.

அதோடு நில்லாமல் ஏன் அவர் வேறு வேறு பெண்களை நாடியோடுபவராகவும், நல்லவர்கள் வெறுத்துரைக்கும் படி நடக்கும் இயல்பினராகவும் இருக்க வேண்டும். தன் தோழிகள் எல்லாம், மனத்திற்குகந்த காதலர்களைப் பெற்று மகிழ்ந்திருக்கும் போது, தான் மட்டும், ஏன் தோல்வியடையக் கூடிய காதலுக்காளாக வேண்டும்? எதிரில் தோன்றிய அந்த உருவங்களைக் காணக் காணத் தங்கத்திற்கு இந்த மாதிரியான ஆயாசமான எண்ணங்கள் ஏற்பட்டன. திடீரென்று அந்த உருவங்கள் வானை நோக்கிச் சென்றன. அப்படியே ஆகாயத்தோடு ஆகாயமாய் மறைந்து விட்டன.

நடராசன், ராஜு, ராதா மலர்க்கொடி எல்லோரும் மறைந்து விட்டார்கள். தங்கம் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். இருட்டடைந்த அறையிலே இருந்த சன்னல் வழியாக வெளியில் தெரிந்த நீல நிறமான வானத்திலே நான்கு நட்சத்திரங்கள் தான் சுடர் விட்டுக் கொண்டிருந்தன.

அத்தனையும் கனவு!

அறை கூவுகிருர் !

அருப்புக்கோட்டை எம்.எஸ்.இராமசாமி

சென்னை தேனும்பேட்டையில் சென்ற கிழமை காங்கிரசு ஊழியர் கூட்டம் நடந்தது. அதில், கனம் காமராசர் பேசியிருக்கிருர்:—

"தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி இப்போது வலுவடைந்து இருக்கிறது. கிராமங்களில்கூட ஆதரவு வளர்ந்துள்ளது.

1962-பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தால்கூட நம்மை அசைக்க முடியாது.

காங்கிரசுக்காரர்கள்; இப்பொழுதிருந்தே தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு எதிர்க்கட்சிகளின் தப்புப் பிரசாரத்தை முறியடிக்க வேண்டும்."

இந்தப் பேச்சின் அடிப்படையைச் சிறப்பாக பொதுமக்கள் உணர்ந்தாக வேண்டும்-உணர்த்தப்பட வேண்டும்.

வடவர் ஏகாதிபத்தியம் தோன்றிய பிறகு மிகமிக தாழ்ந்த நிலைமைக்குப் போயிருப்பது தமிழகம் தான் !

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்த காலத்தில் தமிழகத்தின் பொருளாதார-வணிகத் தொடர்புகளில் பெரும் பகுதி இலங்கை, பர்மா, மலாயா ஆகிய கீழ் நாடுகளில் இருந்தன.

வடவர் ஏகாதிபத்தியம் தோன்றிய அதே நேரத்திலேயே கீழ்நாடுகள் அனைத்தும் தனித்தனி சுதந்திர நாடுகளாகிவிட்டன.

அவைகள் சுதந்திர மடைந்த அதே நேரத்தில், பொருளாதார வளர்ச்சியில் கவனஞ் செலுத்தும் நோக்கில், தமிழகத் தொடர்புகளைத் துண்டிப்பதையே முக்கியமாக்கிக் கொண்டன.

இதனுல் பர்மா, இலங்கை மலாயா இவைகளில் தங்கி வணிகம் நடத்திக் கொண்டிருந்த தமிழர்கள் கொடுமையாகத் துன்புறுத்தி விரட்டப் பட்டார்கள்.

இப்படி அயல் நாடுகளில் பொருளாதாரம் பாதுகாக்கப்படும் நேரத்தில் தமிழகம்-திராவிடம் வடவர்களின் வேட்டைக் காடாக மாறுகிறது.

எப்படி என்ருல், 2 ஐந்தாண்டுத் திட்டங்களும் வடவரின் தொழில் வளர்ச்சிக்கும் விவசாய வளர்ச்சிக்குமே பயன்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலேயே வடவர்கள் தொழில் வளம் சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். வாணிகத்திலும் முதன்மை பெற்றிருந்தார்கள். வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதி ஏஜண்டுகளாகவும் அகில இந்திய விற்பனையாளர்களாகவும் இருப்பவர்களில் 100-க்கு 98 பேர் வடவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழர்கள் வெளிநாட்டை நம்பி இருந்தார்கள், வடவர்கள் உள் நாட்டில் உரம் பெற்றுக்கொண்டிருந்தார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் வடவருக்கு ஏகாதிபத்தியம் கிடைத்துவிட்டவே "காற்றுள்ளபோதே தூற்று" என்பதுபோல வெளிநாடுகளில் இந்தியத் துணைக்கண்டத்தைக் காட்டிக் கடன்களை வாங்கி-ஆலைகள் தொழிற்சாலைகள், அணைகள் ஆகிய எல்லாம் அமைத்து, வருங்கால நல்வாழ்வுக்கு உறுதியான அடிப்படை அமைத்துக்கொண்டார்கள்-இன்னும் அமைத்துக்கொண்டிருக்கிருர்கள்.

இன்று என்ன காண்கிருேம்? முன்பு வெளி நாடுகளிலிருந்து வந்துகொண்டிருந்த அத்தனையும் இன்று வடநாட்டில் செய்யப்படுகின்றன.

அவற்றின் முக்கியமான சில:— சாய மருந்துகள்; மருத்துவ மருந்துகள்; மோட்டார் கார்கள்; சைக்கிள்கள்; அரிக்கன் விளக்கு; பெட்ரோமாக்ஸ்; இரும்பு; அலுமினியம்; உரவுப்பு; வார்னீஸ் பெயிண்டுகள், பிளாஸ்டிக் சாமான்கள், சோப்பு, சீப்பு உள்பட வட இந்தியா உற்பத்தி செய்கிறது. இன்னும் பலவற்றை உற்பத்தி செய்ய 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறது.

வடநாடு உற்பத்தி செய்யும் சாமான்களை விற்பனை செய்யும் இடமாக திராவிடம்-தமிழகம் பயன்கிறது.

இந்த ஏகாதிபத்திய ஆதிக்கச் சுரண்டலுக்கு முறைக்குப் பாதுகாப்பாக இந்திய தத்துவங்களும் சென்னை அரசாங்கமும் இருந்து வருகின்றன.

தமிழர்களின் சாதிப் பித்தமும், தன்னலப் போக்கும், அரசியல் அறிவீனமும், அடிமைப் புத்தியும், சென்னை ஆட்சியாளருக்கு ஆக்கம் செய்து கொடுக்கின்றன.

13 ஆண்டுக்கு மேலாக சென்னை அரசாங்கத்தில் குந்திக்கொண்டிருக்கும் காங்கிரசு என்ன சாதித்தது ?

இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் தமிழகத்தின் அரசியல் கோமாளிகள் ஆளுக்கொரு காரணம் சொல்ல முந்துவார்கள் என்பது நமக்குத் தெரியும்.

சாதனை என்ருல்-ஊரில் பிச்சை எடுத்து பள்ளிப் பிள்ளைகளில் சிலருக்குக் கஞ்சி ஊற்றுவதோ-சில தமிழனுக்கு-பார்ப்பானுக்குப் பதிலாக உத்தியோகம் கொடுப்பதோ-3000 பேர் கொண்ட கிராமத்தில் ரு 3000 வசூல் செய்து ஒரு கக்கூசும் ஒரு தண்ணீர்த் தொட்டியும் கட்டுவதோ சாதனையாகாது.

இவைகள் சராசரி நிர்வாகமே தவிர வேறில்லை. இதிலும் பல முன்னேற்றங்களும் இருக்கக்கூசு எத்தனை பேருக்கு ?

நாட்டின் தேசிய பொருளாதார சமூக முன்னேற்றங்கள்-அவற்றின் சாதனைகள் என்ன ?

உணவுப் பஞ்சம் ! தீர்க்கமுடியாதது என்று அரசாங்கமே தெளிவாக்கிவிட்டது; மக்களை மடலாக்குவதன் மூலம் !

தொழிற் பஞ்சம் ! கள்ளத் தோணிகளும், தற்கொலைகளும், நாட்டின் வரம்பற்ற பிச்சைக்காரர் தொல்லையும் சாட்சிகளாக உள்ளன.

தேசிய வருவாய் ! விலைவாசி உயர்வே தேசிய வருவாய் குன்றிவிட்டதன் அருத்தம் தான் !

பொதுமக்களின் தேசிய உணர்ச்சிகள் சிறிதும் மதிக்கப்படவில்லை. 'திரு' அரசாங்க அடைமொழியாவதிலும் 'தமிழ்' நாடு என்று சென்னை ராஜ்யத்தை மாற்றுவதிலும் ஏற்படும் சிரமம் என்ன ? செலவும் என்ன ? எந்த மந்திரியாவது விளக்கம் சொன்னதுண்டா ? அத்தனை அலட்சியம்—மமதை !

மொத்தத்தில் தமிழகத்தில் கேடுகள் வளர்ந்து வருகின்றன. இந்தக் கேடுகளின் கொடுமை இப்போதிருப்பதைவிட வருங் காலத்தில் அதிகப்படும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

இந்த நிலைமையிலும் 1962-தேர்தலில் அசைக்கமுடியாது என்று காமராசர் அறை கூவுகிருர் என்ருல் காரணம் என்ன ? அத்தனை கட்சிகளும் ஒன்று சேர்ந்தாலும் முடியாதாமே எதனுல் ?

அவர் சொல்வதிலும் உண்மை இல்லாமல் இல்லை. "படிக்காதவர் ஏதோ உளறுகிருர்" என்பது பிரத்தியட்ச உண்மைகளை அறிய மறுப்பதாகும்.

அவர் எந்த உரத்தினுல் அறை கூவுகிருர் என்பதை உணர வேண்டுமானுல் நாட்டிலுள்ள பொதுமக்கள்-வாக்காளர்கள் ஆகியோரின் உள்ளப் பாங்குகளையும்-தேர்தல் பண்புகளையும் அறிய வேண்டும்.

பொதுமக்கள் பலவிதம் : தொழிலாளர்; உழவர்; வணிகர்; அரசாங்க அலுவலர்; இப்படிப் பிரிக்கலாம். அவர்கள் தேர்தலைப்பற்றி என்ன கருதுகிருர்கள் ?

தொழிலாளர்கள் என்று எடுத்துக் கொண்டால் அவர்கள் பலவிதம் : எந்தத் தொழிலாளராயிருந்தாலும் சரியே, அவர்களில் 100-க்கு 99 பேர் அரசியல் சமூக பொருளாதார அறிவு அற்றவர்கள் என்றே சொல்லலாம் ! இப்படிச் சொல்லும் போது பொதுவுடமைத் தோழர்கள் சிறிதும் சீறுவார்கள். எங்கள் அணிவகுப்பில் உள்ளவர்கள் அத்தனை பேரும் பொருளாதார அரசியல் ஞானிகள் என்று சொல்லக்கூடும் ! அப்படி அவர்கள் கருதினுல் தவறுதான். ஆலைகள்-தொழிலகங்களில், நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக தொழிற் சங்கங்கள் இயங்குவதால், தொழிற் சங்கம் தங்களுக்குத் தேவை-அதன் தொடர்பில் தொழிற் சங்கத் தலைவர்கள் சொற் கேட்க வேண்டும் என்றுமட்டும் அத்தகைய தொழிலாளர்கள் உணர்ந்திருக்கிருர்களே தவிர அதற்குமேல் தெரிந்திருப்பவர்கள் மிகச் சிலரேயாவர். தனிப்பட்ட தொழில் செய்யும் தச்சர்கள், கொத்தர்கள், கொல்லர்கள், கைத்தறிகாரர்கள், மீன் பிடிப்போர், இவர் போன்றவர்கள் நிலை என்ன ?

இவர்களுக்கு அரசியலை விட சாதியும், பொருளாதாரத்தை விட அவ்வப்போது தொழில் கொடுக்கும் எஜமானர்களும் தான் முக்கியம்.

தேர்தல் என்ருல்; ஊரார் செலவில் உல்லாசப் பொழுதுபோக்கும் நாள் என்று எண்ணுகிருர்கள் !

50 பேருக்கு ஏதாவது தொழில் கொடுக்குமளவுக்கு முதலாளியாக இருப்பவனெல்லாம் காங்கிரசில் விநோதமான-விவரிக்க முடியாத-சலுகைகள் பெற்றுக் கொண்டிருக்கிருன். பெரிய முதலாளிகளாக இருப்பவர்கள் அத்தனை பேரும் காங்கிரசுதான் என்று சொல்லத் தேவையில்லை.

அவன் என்ன நினைக்கிருன்? காங்கிரசு தன்னுடைய சுய முன்னேற்றத்திற்கு அவசியம் இருந்தாகவேண்டும்-ஆதிக்கம் செலுத்த வேண்டும்-என்று நினைக்கிருன் !

அத்தகைய முதலாளி என்ன சொல்வானே, அதுதான் அரசியல் என்று அவன் கீழ் வேலை செய்யும் சாதாரணத் தொழிலாளி நினைக்கிருன்.

தேர்தல் காலங்களில் கூட்டம் கூட்டமாக மாட்டுச் சின்னத்தில் ஓட்டுப் போடும்படி சின்ன முதலாளியிலிருந்து பெரிய முதலாளி வரை தன்கீழ் வேலை செய்பவரை, நயத்தாலும் பயத்தாலும் நிர்ப்பந்தம் செய்கிருன். அத்துடன் சில்லறை ரூபாய்களையும் கொடுத்து திருப்திப்படுத்துகிருன் வறுமையில் தேய்ந்து கொண்டிருக்கும் தொழிலாளி ஒருவனுக்கு ஓசியாக 5, 10 ரூபாய்களைக் கொடுத்தால்-அதற்கு மேற்பட்ட அரசியல் இல்லை என்று கருதுகிருன் !

இதே கதிதான் விவசாயிகள் நிலைமையும் ! 10 ஏக்கர் சொந்த நிலம் வைத்திருப்பவனுக்கு, குறைந்தது 5 பேர் கூலிவிவசாயம் செய்பவர்கள் இருப்பார்கள். அந்த 5 பேரும் 10 ஏக்கர் பண்ணையார் என்ன சொல்வாரோ, அதுதான் அரசியல் என்று நடக்கிருர்கள் ! 10 ஏக்கர் பண்ணையாரிலிருந்து 1000 ஏக்கர் வைத்திருப்பவனும், அதற்கு மேல் நிலம் வைத்திருப்பவனும், எப்படியோ காங்கிரசுக்குப் பணிகிறவனுகவே இருக்கிருன் ! காரணம்: விசித்திர விநோத சலுகைகள் தான் !

சாதி மனப்பான்மைகளையும் நன்கு பயன் படுத்துகிருர்கள் காங்கிரசுக் காரர்கள் !

தூத்துக்குடி துணைத் தேர்தல் நமக்கு ஒருபடிப்பினை. கம்யூனிஸ்டுகளும் நாமும் இணைந்து நின்றும் தோல்வி கண்ட தேர்தல் அது.

நமது சார்பில் திரு. சிவசாமி ! அவர்கள் சார்பில்—பெடர் நீனைவில்லை-கிறிஸ்தவநாடார் ! வகுப்புப் பிரிவுப்படி நம்மவரும் நாடார்தான்.

காமராசர், அறைகளில் உட்கார்ந்து கொண்டு சாதிப் பிரமுகர்களுக்குச் சொன்னுர்:-

காங்கிரசு வேட்பாளர் கிறிஸ்தவர் ! ஆனுலும் நம்மவர் ! சிவசாமியும் நம்மவர்தான் ! ஆனுல் தி.மு.க. சிவசாமி வென்ருல் அண்ணுத்துரைக்குப் பலம் ! கிறிஸ்தவர் வென்ருல் எனக்குப் பலம் ! உங்களுக்கு யார் வேண்டும்? நானு அண்ணுவா? இந்தக் கேள்வி எத்தகைய மனப் போக்கை ஏற்படுத்தி இருக்கும்-சிந்திக்க வேண்டும் !

இன்னெரு பக்கம் லூர்தம்மாள் ! கிறிஸ்தவப் பாதிரிகளையே தேர்தல் வேலைக்குத் தூண்டி வைத்த புண்ணியவதி !

எப்படி? தி. மு. க. நாத்திகக் கூட்டம் ! சிவசாமி அதைச் சேர்ந்தவர் ! காங்கிரசு சார்பில் இருப்பவர் பரமபிதாவின் ரட்சிப்புக்கு உட்பட்டவர் ! உங்களுக்கு யார் வேண்டும் நாத்திகரா? பரமபிதாவின் ரட்சிப்புக்கு உட்பட்டவரா ?

மற்ருெரு பக்கம் கக்கன் ! காங்கிரசு இருப்பதனுல்தான் நானெல்லாம் மந்திரியாக முடிந்தது ! காங்கிரசுதான் நம்மை முன்னேற்றும் ! அதிலும், காமராசர் நமக்காகவே அவதாரம் செய்த கடவுள்-என் தகப்பன் போன்றவர் ! அவருடைய பலத்தை அதிகப்படுத்த காங்கிரசுக்கே ஓட் செய்யுங்கள் ! காபியும் ரூபாயும் கொடுப்பார்கள் வாங்கிக் கொள்ளுங்கள்-சாப்பிடுங்கள் ! காங்கிரசு போய்விட்டால் நமக்கு எந்த சலுகையும் இராது ! என்று தாழ்த்தப் பட்டவர்களை மிரட்டினுர்-ஆசைக் காட்டினுர் !

(10 ம் பக்கம் பார்க்க)

இலக்கியம் கூறும் வரலாறு

ருக்மணி, இராமனுதன். பி. எஸ். சி.,

"No naval war was ever fought in Indian waters in the eary stages of history. Secondly, piracy, with which the Indian seaboard abounded, can hardly be regaadrd as the art of fighting. It become a mockery of the term "war" if pirates and robbers can be dubbed heroes of a fight" - by Govind Tryambak Date M. A., 1929" -war in Ancient India."

"வரலாற்றின் தொடக்க காலத்தில் இந்தியாவில் கடற்போர் நடைபெறவில்லை. இரண்டாவதாக, "கடற்கொள்ளை" என்று கருதத்தக்க செயலைப் போர் என்று கூறுதல் கடினம், அவ்வாறு "போர்" என்று அதனைக் கூறினால், கடற்கொள்ளைகளும், திருடர்களும் போர்வீரர்களாக ஆக்கப்பட்டு போர் என்ற சொல்லின் உண்மைநிலை பாழ்பட்டு விடும்" - என்று கருத்துப்பட கோவிந்த் திரயாம்பக் தாத்தே என்பவர் 1929ல் ஒரு புத்தகத்தில் எழுதியுள்ளார். இந்தப் புத்தகத்தின் மதிப்பு உயர்ந்த நிலையில் உள்ளது. இதற்காக அவர் ஆராய்ச்சிப் பட்டம் வேறு பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

திராவிடர்தம் ஆற்றலை அறிய முடியாத வடவரது நூலிற் காணப்படும் 'நச்சுச் செய்தி' ஒன்றே நமக்கும் அவர்க்கும் இடையிலுள்ள வேறுபாட்டைக் காட்ட வல்லது. தமிழர் இலக்கிய வளம் பெற்றுள்ளமை அவருக்குத் தெரியாது என்பதைவிட தெரிந்தாலும் அதனை வரலாறு என்று ஒப்ப அவர் மனம மறுக்கிறது. எனலாம்.

கடைச்சங்க இலக்கிய நூலாம் புறநானூறு காட்டுகின்ற ஒளிவிளக்கில் கடற்போர் பற்றிய செய்தி ஒளிர்கின்றது. கடலோட்டிய வெல்கெழு குட்டுவன் என்ற பெயருடைய ஒரு சேர மன்னனைப பரணர் புறநானூற்றில் பாடியுள்ளார் புறநானூறுப் புனுகுச் சிமிழின் 369-ம் பாடலே இக்குறிப்பைத் தருகிறது.

கடலிலே கயவர்கள் தந்த தொல்லை தாளாமல் சேரன் கடற்போர் செய்து கவலையைப் போக்கிய நிலையைப் பதிற்றுப் பத்தில் வேருெரு செய்தி குறிக்கிறது

"பல்செருக் கடந்த
கொல் களிற்று யானைக்
கோடுநரல் பௌவம்
கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பில்
படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்."

(பதிற் : XLVI 10-13)

இப்பாடலின்மூலம் கடற்கொள்ளை புரியும் கயமைக்கூட்டம் ஒரு தீவினைத் தாயகமாய்க் கொண்டு தகாத செயல் புரிந்தது என்பதையும், கடல் ஒன்றே நல்ல பாதுகாப்பு என்று இறுமாந்திருந்தது என்பதையும் அறிந்த சேரன் (செங்குட்டுவன்) வீரர் கூட்டத்துடன் யானைமீதேறி நின்று கடலகத்தில் இறங்கி வேல்களை வீசினன். இதனல் பகைவரது பாதுகாப்புப் பலனளிக்கவில்லை.

இச்செய்தியை மேலும் வலிவு ஊட்டும் வகையில் வேறு இடங்களிலும் திரும்பக் கூறப்பட்டுள்ளது.

'கடும்பரிப் புரவி
ஊர்ந்த நின்
படுதிரைப் பனிக்கடல்
உழந்த தாளே.'

(பதிற் : XLI 26-27)

"கெடலரும் பல்புகழ்
நிலைஇ நீர்புக்கு
கடலொடு உழந்த
பனித்துறைப் பரதவர் !"

(பதிற் : XLVIII 34)

சேரன் செங்குட்டுவன் "கடல் மறவன்" என்று அழைக்கப்பட்டிருக்கிருன். அஞ்சா நெஞ்சினனாய் அலைகடலைக் கண்டு அயராது கயவர் கூட்டத்தை அவர்தம் தீவு சென்றே போரிட்டு வென்றிருக்கும் பெருமை திராவிடர்க்கு உண்டு. "எதிரிகளுடன் போரிட்ட 'பரதவன் அல்லது மறவன்' என்று சேரன் பாராட்டப் படுகின்ருன்."

பதிற்றுப் பத்து மட்டுமல்ல, சிலப்பதிகாரமும் கடற்போரை வலியுறுத்து கின்றது

"தாங்கிடும் பரப்பில்
கடல் பிறக்கோட்டி

(காதை : 30-12)

தமிழர் தம் எஞ்சிய வரலாற்றுப் பேடகங்கள் இன்று உலவுகின்ற சங்க இலக்கியங்கள் என்பதை அனைவரும் ஒப்புவர். பதிற்றுப் பத்தும், சிலம்பும் - புறநானூறும் காட்டுகின்ற புத்தொளியில் கருத்துக் குருடர்களுக்கு வெளிச்சமா தெரியப் போகிறது! அவர்கள் கருத்துக் குருடர்கள்தானே! எடுத்துக்காட்டுக்களை இலக்கியம் தருகிறதே? என்ருல் அவை கற்பனை! என்று அழுத்தமாகக் கூறுகிற நெஞ்சழுத்தம் அவர்களுக்கு உண்டு. 'பரீக்ஷித்' மகாராஜா வடநாட்டு இலக்கியத்தில் ஒரு கற்பனை மன்னன் என்பதை மறந்து வரலாற்று வழியில் ஒப்புக்கொள்ளும் ஆராய்ச்சி வல்லுநர்கள் தென்னுட்டு (சிலம்பையும் புறத்தையும்) இலக்கியச் செய்திகளை மட்டும் கற்பனை என்று ஒதுக்குவதன் காரணம் என்ன? ஒதுக்குவதைக் கூடப் பொறுத்துக்கொள்ளலாம்: 'கடற்கொள்ளைக் கூட்டம்தான் பழங் காலத்தில் போரிட்டது. இதனைப் போர் என்ருே, வீரர்கள் என்ருே விளம்புவது வேடிக்கைதான்' என்று தாத்தே எழுதுகிருர்.

சேரன் செங்குட்டுவனைப் பழிக்கிருர்! திருடன் என்றும் வீரமறவனைக் கோழை என்றும் கூறுகிருர். காரணம். சேரனைப் பற்றிய செய்தி அவருக்குக் கிடைக்காமலும் இருக்கலாம். ஆனல் அவர் 'கடற்போர் நடைபெற்றிருக்கிறது. என்பதை அரை மனத்தோடு ஒப்புகிருர். அப்படியே நடந்தாலும் அது கடற்கொள்ளைக் கூட்டமே' என்கிருர். இங்குத்தான் அவரது கருத்தில் தென்னகம் மறைக்கப்பட்டோ, குறைவுபடுத்தப் பட்டோ காணப் படுகிறது.

வடபுலத்தாருக்குக் கடல், தேடிச் செல்லவேண்டிய பகுதி! நமக்கு மூன்று புறங்களிலும் எல்லையே கடல் தான். எல்லையைக் கடந்து வெற்றி வெற்றுப் பட்டங்களைப் பெற்ற சோழ மன்னர்கள் உண்டு. தெரிந்தோ, அல்லது மறந்தோ மறவர் சிறப்பு மண்மேடாக்கப்பட்ட வரலாற்றை இப்புத்தகம் இன்றும் கூறுகிறது.

"போந்தைக் கண்ணி நின்
ஊங்கணோர் மருங்கில்
கடற்கடம்பு எறிந்த
காவலனுயினும்"

(சிலம்பு: 27-134-5)

"முந்நீரின் உட்புக்கு
மூவாக் கடம்பு எறிந்தான்
மன்னர்கோச் சேரன்
வளவஞ்சி வாழ்வேந்தன்
கல்நவில் தோள்ஓச்சி
கடல் கடைந்தான்"

(சிலப்பு-17-3)

இவை கடம்பு எறிந்த செய்தி கூறும் வரலாறு ஆகும். கடலின் கண்ணிறந்த கடப்பு என்பதை இலக்கியக் கண்ணுடி தெளிவாகக் காட்டுகிறது.

அகநானூற்றிலும் கடற் கடப்பு வென்ற செய்தி விளம்பப்படுகின்றது.

"வலர்படு முரசின்
சேரலாதன்
முந்நீர் ஓட்டிக்
கடப்பறுத்து"

(அகம்-127)

கடலின்கண் படை ஓட்டிக் கடம் பினை வென்ற களிப்பான செய்தியை இவ்விலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன.

கடலினைப் பாதுகாப்பு என்று கருதிய கயவர்களைப் போரிட்டு, வீரர்களோடு போரிட்டு வென்ற செய்தி அவனுக்குப் பெரிய செய்தியாக்கப் பட்டதால்தான், அந்த நிகழ்ச்சியை அடை மொழியாகக் கொண்டு அழைக்கப்பட்டிருக்கிருன். இவைகளையும் "கற்பனை" என்று கருத்துக் குருடர்கள் கதையாக்கிவிட்டாலும் காது கொடுத்துக் கேட்கும் செவிடர்கள் இன்றும் உலவுகின்றனர்.

பெரும் பேரரசாம் சோழப் பேரரசில் 934-ல் நடைபெற்ற இலங்கைப் படையெடுப்பு கடல் கடந்தல்லவா நடைபெற்றது! இவைகளையெல்லாம் தமிழ் இலக்கியங்கள் இன்றும் எடுத்துக் கூறுகின்றன. ஆனல் அதனைச் செவிமடுத்துச் சிந்திக்க மறுக்கும் கூட்டத்தார் கதை-கற்பனை என்று கூறுவது உண்மையை உதறித் தள்ளுவதன்றி வேறென்னவாகும்?

காலக் கழிவில் இழந்த பெருமையைத் தமிழகம் பெற்றே தீரும்-வீழ்ந்த திராவிடர் விழிப்புணர்ச்சியின் விடிவெள்ளி ஒளிரும் பொன்னுள் விரைவில் வந்தேதீரும்-அந்த நாளில் இந்த நாட்டு வரலாற்று உண்மை உலகிற்கு உணர்த்தப்படும். வடவரின் இருட்டடிப்பை வரலாற்று ஒளி கொண்டு துலக்கி வாகை சூடியே தீருவர். அன்று "இது"போன்ற ஆராய்ச்சி நூல்கள் கதையாய்-கற்பனையாய் ஒதுக்கப்படும் என்பதை திரு. தாத்தே போன்றவர்கள் உணர்வார்களாக!

சிதம்பர ரகசியம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மிருகக்காட்சி சாலையின் அதிகாரி எனனச் சொல்லப் போகிருரோ என்று.

மிருகக் காட்சிசாலைக்கு முன்னல் கார் போய் நின்றது 'மிக்க நன்றி!' என்று கூறிவிட்டுக் கீழே இறங்கினன் சிதம்பரம். 'வாழ்நாள் முழுதும் நானல்லவா உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்' என்று சிரித்தாள் தாமரைச்செல்வி. அவனும் சிரித்தான். கார் சென்றுவிட்டது.

மிருகக்காட்சி சாலைக்குள் நுழைந்ததும், 'உங்களை மானேஜர் வரச் சொன்னர்' என்று ஆபீஸ் பையன் வந்து சொன்னன். சிதம்பரத்திற்கு உடம்பெல்லாம் நடுங்கியது. உயிரைக்கையில்பிடித்துக்கொண்டு அதிகாரியின் முன் போய் நின்ருன். சிதம்பரத்தின் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தார் அதிகாரி. 'உம்மை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன். நீர் இந்த சிங்கத்தைப்பற்றிய' இரகசியத்தை வெளியில எவரிடமாவது சொன்னல் உம்மீது வழக்குப் போட்டு உம்மைச் சிறையில் தள்ளி விடுவேன்' என்று உறுமினர்.

சிதம்பரம் ஏதோ சொல்வதற்காக முயன்ருன், ஆனல், அவர் நாற்காலியை விட்டு எழுந்து போய் விடவே அவன் ஒரு நீண்ட பெருமூச்சை விட்டுவிட்டு, மிருகக் காட்சி சாலையை விட்டு வெளியில் நடந்தான். நடந்தான் நடந்தான் எங்கே செல்கிருேம்-என்று தெரியாமல் நடந்து கொண்டேயிருந்தான்.

அன்று மாலை நான்கு மணியிருக்கும். உலகநாதன், தாமரைச்செல்வி அவள் தாயார் எல்லோரும் மிருகக் காட்சி சாலைக்கு வந்து சிதம்பரத்தைப்பற்றி விசாரித்தார்கள். சிதம்பரம் வேலையிலிருந்து நீக்கப்பட்ட செய்தி தெரிந்து எல்லோரும் பதறினர்கள் தாமரைச்செல்வி துடியாய்த் துடித்தாள்.

அவன் எங்கேயிருக்கிருன்-என்று விசாரித்தும் அவனுடைய இருப்பிடம் ஒருவருக்கும தெரியவில்லை. ஆகையால் தாமரைச்செல்வி கண் கலங்கினள்.

'இதற்கு ஏன் செல்வி கண் கலங்குகிருய்?' என்ருர் உலகநாதன்.

"நான் அவரைத்தான் திருமணம் செய்துகொள்ளலாமென்று இருந்தேன்" முகத்தைக் கையால் மூடிக் கொண்டு 'விக்கி விக்கி' அழுதாள் தாமரைச்செல்வி.

"அடடே! அப்படியா சங்கதி! இதைக் காலையிலேயே சொல்லியிருக்கக்கூடாதா..." உலகநாதன் கையை உதறிக்கொண்டே சொன்னர்.

"என்னம்மா இது! வேடிக்கையாகயிருக்கிறது. அவன் யாரோ எவனே முன்பின் தெரியாத ஒருவனை..." தாமரைச் செல்வியின் தாயார் இப்படி முணுமுணுத்தாள்.

"நீ சும்மா இருடி. அந்தக் காலமென்று நினைத்துக் கொண்டிருக்கிருயா...?" உலகநாதன் மிரட்டினர்.

"இப்பொழுது அவரை எங்கே தேடுவது?" என்ருள் தாமரைச் செல்வி.

"கோடம்பாக்கத்தில் இருப்பதாகக் கேள்வி"யென்ருன் ஆபீஸ் பையன்.

மூவரும் காரில் ஏறி உட்கார்ந்தார்கள். காரைத் தாமரைச் செல்வியே ஓட்டினுள். கார் கோடம்பாக்கத்தை அடைந்தது. கோடம்பாக்கத்தில் ஒரு தெருக்கூட மீதமில்லாமல் சுற்றிச் சுற்றித் தேடினர்கள். சிதம்பரத்தைப்பற்றிய செய்தி ஒன்றும் கிடைக்கவில்லை! மணி இரவு எட்டாகிவிடவே, சோர்ந்து போய்த் தங்களது இல்லத்திற்குத் திரும்பிச் சென்ருர்கள்.

வீட்டிற்குள் நுழைந்த உலகநாதன் அவர்கள் 'வணக்கம் ஐயா!' சிதம்பரத்தின் குரலை கேட்டுத் திடுக்கிட்டார்,

"நல்ல வேடிக்கையான மனிதரையா நீர்! உம்மை ஊர் முழுதும் தேடிக்கொண்டு வருகிருேம். நீர் என்னவென்ருல் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்!'

"ஒன்றுமில்லை! அந்த சிங்கத்தைப்பற்றிய இரகசியத்தை ஒருவரிடமும் சொல்ல வேண்டாம். அப்படி வெளியில் தெரிந்தால் என்னை, மிருகக் காட்சிசாலையின் மானேசர் சிறையில் போட்டு விடுவதாகக் கூறியிருக்கிருர். ஆகையால் அந்த இரகசியத்தை வெளியில் யாரிடமும் சொல்லி விட வேண்டாமென்று சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். நான் போய் வருகிறன்" சிதம்பரம் புறப்படுவதற்காகத் திரும்பினன். பின்னல் தாமரைச் செல்வி 'எங்கே போகப் போகிறீர்கள்' என்று அவனுடைய கையைப் பிடித்து நாற்காலியில் உட்கார வைத்தாள்.

"என்னடி அவசரம்! அதற்குள் கையைப் பிடித்து இழுக்கிருயே! இன்னும் சில நாட்கள் பொறுத்திருந்தால் என்ன?" என்று கேட்டாள் அவள் தோழி.

சிதம்பரம் திருதிருவென்று விழித்துக்கொண்டிருந்தான்.

காதலி

பனா. சன்முகம்

பொன்னுருக்கி வார்த்(து)அச்சுக் கூட்டித் தண்மை
பொலிநிலவு தோற்றோட மெருகு தீட்டி
மின்னுருவம் கொடியி டையும் சமைத்துப் பெண்மை
மேவுமெழில் உருவாக்கிக் கொலுவிற் கண்போர்
கண்ணுருவி உளத்தையூ டுருவித் தைத்துக்
காதலுறச் செயவல்ல பதுமை போலப்
பெண்ணுருவை நான்கண்டேன் ; எனைமறந்தேன்
பெண்மயிலாள் கண்புகுந்து உளம்நி லைத்தேன்.

மொழிவாயில் வரமறுக்க இருவர் நெஞ்சும்
முகிழ்க்கின்ற எண்ணங்கள் பெருக்கெடுக்க
விழிவாயில் இமைக்கதவு செயல் மறக்க
விழி வழியே எழிலுண்டு மகிழ்ந்தோம் ; ஊரார்
பழி வாயில் பறையறைவார் என்னும் அச்சம்
பாதியிலே தலைதூக்கத் தலைகு னிந்து
பொழில் வாயில் உட்புகுந்தாள் ; பின்தொடர்ந்தேன்
பூமலரின் வண்டு வரும் இயற்கை போல.

'காதலி'என் றழைத்திட்டேன் அவளும் 'என்னைக்
காதலி' என் றழைத்திட்டாள் கண்ணைக் காட்டி
காதலிக்கத் துணிந்தேநான் ; நெருங்கி நின்றேன்
காதலரும் காதலியும் தனித்தி ருக்கும்
காதனிலே தென்றலுடன் இருந்த போதும்
காதலரைப் பிரிப்பதில்லை வாழ்த்தே பாடும்
காத லரும் பும் இளமை உளம் கலந்த
காதலுற வமைதிகொடு வுயிர்க லந்தோம்.

வெளிப்படை ஸ்திரிமுகம்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

உள்ள நான்கு வேதங்கள்-சோதிட முதலான சாஸ்திரங்கள்-காயத்திரி முதலான மந்திரங்கள் அத்தனையும் பொய் !

இப்படி கைவல்யம் சொல்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா ?

தீபாவளி கொண்டாடுவதால் எத்தனை குடும்பங்கள் ஆருத்துயரத்தில் அழுந்துகின்றன என்பதை அறிவீரா ?

தீபாவளியால் ஏற்படும்-பயனற்ற தேசியப் பொருளாதாரச் செலவு எவ்வளவு என்று தெரியுமா ?

தீபாவளியால் இந்த நாட்டின் அறிவுடைமை அயல்நாட்டில் எள்ளி நகையாடப் படுகிறது என்பது தெரியுமா ?

தீபாவளிப் புனிதத்தை இந்நாட்டில் திருப்பனந்தாள், திருவாடுதுறை, மதுரை குன்றக்குடி. ஆகிய பல்வேறு ஆதீனர்கள் சொல்லவில்லை என்பது உமக்குத் தெரியுமா ? அவர்களைவிட எந்தப் பெருமையும் உயர்வும் உமக்கு இருக்கவில்லை என்பதாவது தெரியுமா ?

இந்த விஞ்ஞானக் காலத்தில் அறிவுக்கும் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் தொண்டு செய்வதை விடுத்து மங்கள ஸ்நானம்—புனிததினம். கங்காஸ்நானம் என்று பிதற்றி உம்மைப் பின்பற்றி நிற்போரின் நேரத்தையும் நினைப்பையும் பாழடித்து மடமை மூட்டையை தலையில் ஏற்றி விட்டுக் கொண்டிருக்கிறீர் ! உம்மை என்னவென்று சொல்வது ?

உம்முடைய ஸ்திரிமுகத்தை ஒரு தடவை வெளியிட்டது போதாதென்று தொடர்ந்து வெளியிடும் கல்கி ஏட்டை எப்படி வர்ணிப்பதென்றே தோன்றவில்லையே !

இந்த நாட்டில் அறியாமை விலகுவது கல்கிக்கு விருப்பமில்லையா ? இதுதான் சிறந்த ஆஸ்திகத் தொண்டு என்று கருதுகிறதோ ?

புராணங்கள் பெருமைப் படுத்தும் வரை இந்த நாட்டில் சாதிக் கொடுமை போகாது—சாதிக்கொடுமை இருக்கும் வரை ஒற்றுமை இராது. ஒற்றுமை இல்லாதவரை நல்வாழ்வு இல்லை என்பது கல்கிக்கு தெரியுமா—தெரியாதா ?

அக்கிரஃகாரத்தில் பகுத்தறிவு தேவையில்லை என்பது கல்கியின் எண்ணமோ ?

★

அறை கூவுகிறார் !

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இது போல் யார் யாருக்கு என்ன என்ன திருப்திகள் செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்து தேர்தலில் வெற்றிக் கண்டார்கள் தூத்துக்குடியில் !

சாதாரண காலங்களில், அரசியல் தத்துவங்களையும், கேடு வளரும் வழிகளையும், விளக்கினால் ஓரளவு பொதுமக்களுக்குப் புரிகிறது! தேர்தல் காலங்களில் சாதி, மதம், காபி, கைக்கூலி, சுயநலம் இவைகள்தான் பொதுமக்களுக்குப் புரிகிறது !

சாதிக்கு இருக்கும் மரியாதை தனி! ஆச்சாரியார் காங்கிரசில் இருந்தபோது காங்கிரசுக் காரராக உலவிய பார்ப்பன மக்கள் பலர் இப்போது காங்கிரசை விட்டு விட்டார்கள். படித்த ஒரு சாதியின் நிலைமையே இப்படி என்றால் பாமர மக்கள் மிகுந்த சாதிப் பிரிவுகளின் கதி என்ன ?

போதாக்குறைக்கு காமராசரிடம் காணுததைக் கண்டு மகிழ்ந்த பெரியார் இருக்கிறார்! தமிழன் அத்தனை பேருக்கும் நன்மை செய்யவே காமராசர் அவதாரம் எடுத்திருக்கிறார், என்பது அவர் பல்லவி !

இந்தநாடு என்ன கதியானால் என்ன! நான்கு தமிழனுக்கு உத்தியோகம் கொடுத்திருப்பது போதாதா? என்கிறார் அவர் !

காமராசருக்கு தேர்தல் செலவுக்கு எத்தனை கோடி வேண்டுமானாலும்தருவதற்கு இந்தநாட்டை வேட்டைக் காடாக்கிய வடவர்களும்,உள்நாட்டு இரும்புப் பெட்டிகளும், செக் புத்தகங்களும், இருக்கிறார்கள் !

இத்தனையும் நம்பித்தான் காமராசர் அறை கூவுகிறார் 1962-ல் அடைக்க முடியாது என்று !

தி. மு. க. பேச்சாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் கடுமையான பணி காத்துக் கொண்டிருக்கிறது! நம்மிடம் உள்ள ஆயுதங்கள் இரண்டுதான் ஒன்று - பேச்சு இன்னொன்று-எழுத்து !

அந்த ஆயுதங்களைக் குறிதவறுமல் கூர்மைகுலையாமல் உபயோகிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

காங்கிரசு ஆதிக்கத்திற்கு அச்சாணிகள் போன்று இருப்பவர் யார் யார் ?

1) சாதித்தலைவர்கள்.
2) தொழில் முதலாளிகள்.
3) நிலப்பிரபுக்கள்.
4) மதத்தலைவர்கள்.
5) உத்தியோகத்திலிருப்பவர்.
6) லைசென்ஸ்-பெர்மிட் வாங்குவோர்.
7) கவர்மெண்ட் காண்ட்ராக்டர்ஸ்
8) இறக்குமதி ஏற்றுமதி வணிகர்கள்.
9) மோட்டார் பஸ் அதிபர்கள்.
10) ஆலை அதிபர்கள்.
11) பலவித ஏஜண்டுகள்.

இவர்களை மொத்தம் கணக்கு எடுத்தால் ஏறக்குறைய 10,000 பேர் இருப்பார்கள்-இந்தப் பத்தாயிரம் பேர் சுயநலத்திற்காக இந்த நாட்டை வடவனுக்கு அடிமையாக்கி-அடிமை மீள முடியாமல்-காவல் காத்து வருகிறார்கள்! இவர்களை மீறி தி. மு. கவுக்கு வாக்களித்தால்தான் நாடு உருப்படும்-என்பதை எழுத்தாலும் பேச்சாலும் பொதுமக்களுக்கு விளக்க வேண்டும்-அதையே முழுமுதல் கடமையாக உடனடியாகத் தொடங்கியாக வேண்டும்.

ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அவர்கள் ஊரிலும் சுற்றியுள்ள ஊர்களிலும் இருக்கின்ற காங்கிரசுப் பிரமுகர்களின் வரலாறுகளைச் சேகரிக்க வேண்டும். அவர்கள் காங்கிரசுக்கு வந்த காலம் : ஆட்சியாளரிடம் பெற்ற-பெறுகின்ற சலுகைகள்-வாழ்க்கைத் தரம்- செய்த- செய்கின்ற தொழில், முதலிய விவரங்களடங்கிய புத்தகம் தயாரித்துப் பேச்சாளர்களிடம் குறிப்புகள் கொடுக்க வேண்டும்.

கழகத் தொண்டர்கள் பொதுமக்களின் தொண்டர்களாக இயங்க வேண்டும். பொதுமக்களின் இன்ப துன்பங்கள் எல்லாவற்றுக்கும் உற்ற துணைவர்களாகத் திகழ வேண்டும். 1962-க்குள் நாட்டில் மாபெரும் மாறுதல் ஏற்படுத்தியாக வேண்டும்.

அப்போதுதான் காமராசரின் ஆணவமிக்க அறைகூவலை கழகம் ஏற்றுக்கொண்டதாக இருக்கும். ஒரு நொடி நேரமும் வீண் காலம் ஆகக்கூடாது.

இத்தனையெல்லாம் செய்து தி. மு. க. வென்றாலும், அதன்பிறகு ஏராளம் தேவையும். அதையும் தாங்கிச் சமாளிக்க முன் கூட்டிய திட்டங்கள் வேண்டும்.

தி மு. க வளர்ந்திருக்கிறது ! ஆனால், வலிமை எய்த வேண்டும் ! அந்த வலிமை, உண்மையான தொண்டர்களின் தொண்டில் இருக்கிறது ! அரியலூரார் தலைமை ஏற்ற பின்பு அடிதடிகளும், கொலைகளும் நடக்கின்றன-காந்தியின் பேரால் ! எல்லாவற்றையும் எதிர்பார்க்க வேண்டும்-இடும்பர்கள் தலைசாயும் வரை !

கண்ணதாசன் படிப்பகம்

புதிய நிர்வாகக் குழு

நாளது 15-10-60 மாலை 6 மணியளவில் 34-வது வட்ட கவிஞர் கண்ணதாசன் படிப்பக பொது உறுப்பினர் கூட்டம் தோழர் டி. நடராசன் (தி. மு. கழக மாவட்ட பிரிதிநிதி) தலைமையில் கடந்த ஆண்டின் வரவு செலவு பரிசீலனையும் புது நிர்வாக தேர்தலும் நடைபெற்றது. தலைவர் :-கே. ஜானி பாஷா, செயலாளர் :-கே. இராகவன் துணைச் செயலாளர் :-ஜே. எஸ். குமார். பொருளாளர் இ. தாமோதரம். செயற்குழு உறுப்பினர்கள் :— எஸ். ஆர். செங்கழனி, ஆர். இராமலிங்கம், இ. மாரி கே. ஜாக்கப், பி. எஸ். கண்ணன், எஸ். டி. தங்கவேலு, அசேன் ஆகியோர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று செயலாளர் அறிவிக்கிறார்.

மனித வாழ்வு

கி. வேலாயுதன்.

நீ 'கரு'வென்னும் பெயர் பெற்ருய் ஒரு நாள். அன்று முதல் சிறிது சிறிதாக வளர்ந்தாய் இம் மண்ணையே நோக்காதிருந்த காலமது. நீ நடக்காமலேயே எங்கெங்கோ சென்ருய்! உண்ணுமலேயே உண்டாய்! இந்நிலையில். உன்னைச் சுமந்திருந்த பெண்ணின் பெருமையையும் பொறுமையையும் சற்று எண்ணிப் பார், சோர்வு ஏற்படுகிறதென்று கீழே இறக்கி வைக்க முடியுமா? பத்துத் திங்கள் மட்டும், நின்ருலும் இருந்தாலும். கிடந்தாலும் நடந்தாலும், மென்ருலும் துயின்ருலும், விழித்தாலும் இமைத்தாலும்' உன்னைச் சுமந்து கொண்டே இருந்தாள்.

பெருப்பளுவைச் சுமந்து கொண்டிருப்பவன் அதைக் கீழே இறக்கி வைத்தவுடன் தளர்ச்சியும் சோர்வும் வருத்தப் பெருமூச்சு விடுவான். ஆனல் பளுவாகிய நீ இறங்கியவுடன் உன்னைச் சுமந்திருந்தவள் உள்ளக் கிளர்ச்சி கொண்டாள். மலர்ச்சியுற்ருள். உன்னை நோக்கிப் பெரும் பூரிப்படைந்தாள். அப்போது நீ பெற்ற பெயர் குழந்தை.

அப்போது உனக்குப் பேசத் தெரியாது. வயிறு பசித்தாலும் அழுவாய்; வயிறு வலித்தாலும் அழுவாய், அதையறிந்து 'தாய்' என்று நின்னுற் பட்டம் கொடுக்கப்பட்ட அவள் சாலப்பரிந்து எடுத்து அணைத்து அமுதூட்டினள். 'இளமகப்பசிதனக் கேந்து கொங்கைப் பால் அளவறிந்தூட்டும்' அவளே சில வேலைகளில் மருந்தும் கொடுத்தாள். இதுதான் தாய்மையின் சிறப்பு! சில திங்கள் கழிந்தன.

'கிண்கிணி கிணின் கிணின்
  கிணினெனக் குண்டல
மசைந்திட,'
'தந்தன தனந்தனந்
  தனவெனச் செஞ்சிறு
சலங்கைகொஞ் சிடபணித்
  தண்டைகள் கலின்கலின்
கலினென,

ஒலிக்கத் தவழலுற்ருய். விளக்கைத் தொட்டுப் பார்த்த பிறகுதான் அது 'சுடும்' என்றறியும் பருவம் அது

'முத்தே பவளமே
  முக்கனியே சர்க்கரையே
கொத்து மருக் கொழுந்தே
  கோமளமே கண்வளராய்'

எனத் தாலாட்டி மகிழ்ந்தாள் உன் தாய்.

மேலும் சில திங்கள் சென்றன. நீ குதலை மொழி பேசத் தொடங்கினுய். உன்தாய்க்கு மட்டுமே அதுபுரியும், பின் மழலை மொழியத் துவங்கினுய். 'சளசளவெனப் பேசாதே'என்று வயது வளர்ந்தபின் கூறியதாய். எதையெதையோ கேட்டும் கூறியும் உன்னைப் பேசச் சொன்னுள் உன்னை அந்த வேளையில் பாராட்டாத ஆளே இல்லை!

'குழலினிது யாழினிது
  என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளாதவர்'
(குறள் 66)

'யாழொடுப் கொள்ளா
  பொழுதொடும் புணரா
பொருளொடும் வாரா
  வாயினும் அருள்வந்
தனவால் புதல்வர்தம் மழலை
(புறம் 92)

'கல்லா மழலைக் கனியூறல்
  கலந்து கொஞ்சுஞ்
சொல்லா லுருக்கியழுதொடித்
  தொடர்ந்துபற்றி மல்லார்
புயத்தில் விளையாடு
  மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வி
  னினிமையென்னும்'
(வில்லிபாரதம் 214)

'மழைகூட ஒருநாளில்
  தேனுகலாம்
மணல்கூட சிலநாளில்
  பொன்னுகலாம்
ஆனலும் அவையாவும்
  நீயாகுமா
அம்மா வென்றழைக் கின்ற
  சேயாகுமா'
(கண்ணதாசன்)

என்றிவ்வாறு பலரால் போற்றப் பட்டாய்.

சிறிது சிறிதாக நடக்க ஆரம்பித்தாய். நடை வண்டி ஒன்றை உன் தாய் தந்தாள். அது, 'உலகில் நாமாகத் தனித்து எதையும் ஆற்ற முடியாது என்ற நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்ததோ அல்லது வாழ்வில் முன்னேறத் துணையொன்று தேவை எனற எண்ணத்தை உண்டாக்கியதோ?

மணற்பரப்பிலெல்லாம் சென்று விளையாட ஆரப்பித்தாய். அங்ஙனம் விளையாடும் பொழுது உன்தாய் கூட உன்னைக் கண்டித்தாள். அவ்வேளை உனக்காக அனுதாபப் பட்டவர் தாகூர் ஒருவரே. 'ஆடையால் அலங்கரிக்கப் பட்ட குழந்தை கழுத்தில் தொங்கும் நகைச் சங்கிலியால் கட்டுண்டு விளையாட்டின் தன்னுரிமையின்பத்தையிழக்கிறது என்று கூறினுர். அன்று நீ சிறுவன்.

ஆண்டுகள் ஐந்து முடிந்தன 'அம்மா' என்று கூற பட்டும் தெரிந்திருந்த நீ எழுதவும் தெரிந்து கொண்டாய். உலகமெனும் பள்ளியில் அனைவரும் மாணவரேயாயினும் உனக்குச் சிறப்பாக அப்பெயரை வழங்கினர்.

கற்பலகைத் துண்டினுல் எழுதிய நீ எழுதுகோலால் (பென்சிலால்) எழுதினுய்; பிறகு ஊற்றெழுது கோலைப் பயன் படுத்தினுய். காற்சட்டையணிந்ததை விட்டுவிட்டு முண்டு உடுக்கத் தொடங்கினுய் தலைமயிரைப் பற்றி அக்கறை கொள்ளாத நீ அதை 'மனித வாழ்க்கையில் மேடு பள்ளம், ஏற்ற இறக்கம் கட்டாயம் உண்டு' என்பதை அறிவிப்பதுபோல வகிவாகச் சீவிப் போற்றினுய். நாட்கள் ஓடின.

தலை மயிரைப் போற்றுவதைவிட தலைக்குள்ளிருப்பதை அதிகமாகப் போற்றக் கவலை கொண்டாய். இங்குதான் கவலை இன்பத்தைத்தருகிறது!

உயர் நிலைப் பள்ளியை விட்டு வெளியே வந்தபோது 'இளைஞன்' என்ற பெயரோடு வந்தாய். அப்போது நீ போலி மதிப்பையும். ஆடம்பரத்தையும் விரும்பக்கூடிய சூழ்நிலை ஏற்படத்தான் செய்தது. இருப்பினும் அவற்றையெல்லாம் நீக்கினுய்.'காளை' என்ற பெயர் உன்னையுற்ற பருவத்தில் வலிவோடும் துடிப்போடும், விரைவோடும் எதையும் செய்தாய். உனது விரைவிலும் தெளிவு இருந்தது

சிறிது நாளில் 'மணமகன்' என்ற பெயரைப்பூண்டாய்.

'அறிதோ றறியாமை
  கண்டற்ருல் காமம்
செறிதோறும் சேயிழை
  மாட்டு'

என்னும் குறளையுணர்ந்தாய்; மகிழ்ந்தாய். 'அத்தான்' என்னும் அன்புக் குரலில் நீ உன்னையே பறிகொடுத்தாய்.

உலகில் பெரியவர்கள் கற்றவர்கள் தான் பட்டம் அளிப்பார்கள். ஆனல் உனக்கோ வாய் பேசியறியாதவொன்று 'தந்தை' என்ற ஒப்பற்ற பொறுப்பு மிக்க பட்டத்தை வழங்கிற்று இதன்பின் 'செல்வன்' 'வறிஞன்' என்ற பெயர்கள் சில உன்னைத் தொட்டுப் பிரிந்தன.

'காலமென்பது கறங்கு
  போற் சுழன்று
மேலது கீழாய்க்
  கீழது மேலாய்
மாறிடும் தோற்றம்'
  ஆதலால்,
'தொந்தி சரிய
  மயிரே வெளிர நிரை
தந்தமசைய முதுகே
  வளைய இதழ்
தொங்க வொருகை தடி'
  யூன்றி நடக்க ஆரம்
[பித்தாய்.

'நீ நடைபழகத் தொடங்கிய நாளிலும் ஒன்றைப் பற்றியே நடக்கப் பழகினுய்; நடை தளரத் தொடங்கிய நாளிலும் ஒன்றைப் பற்றியே நடந்தாய்.'

இப்போது உனக்கு பாட்டன், பூட்டன் முதலிய பல பட்டங்கள் தரப்பட்டன.

ஆனல் திடீரென்று ஒருநாள் 'பிணம்' என்ற பட்டத்தைத் தந்து உன்னுடலை எரித்தனர் உலகோர்! பட்டத்தைத் தந்து வாழவைப்பதும் உலகம்! தாழவைப்பதும் உலகம்!! வீழவைப்பதும் உலகம் !!!

சற்று சிந்தனையைப் பின்னேக்கித் திருப்பு.

கரு குழந்தை, சிறுவன், மாணவன். இளைஞன், காளை, மணமகன் (செல்வன், வறியவன்) அத்தான், தந்தை. தாத்தா, பிணம் என்னும் பல பெயர்களைப் பெற்ருய். இவற்றுள் இறுதிப் பட்டம் மண்ணை நோக்கிப் பிறந்த உன்னை மண்ணுக்குள் செலுத்துவது. இந்தப் பட்டத்தைப் பெறும் வரை. உன்மனம் உனக்கு ஓர் ஒப்பற்ற பட்டததை அளித்திருந்தது. உன்னை உலகத்தோரால் மதிக்கச் செய்தது அதுவே! நெறி பிறழாதுவாழச் செய்ததும் அதுவே!! அதுதான் 'மனிதன்.'

இரண்டாவது கைமை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றித்தான் கவலை. யாரைப் போய் விசாரிப்பது?

தற்செயலாக ஒருநாள் ஆதிமூலம் பாங்க்'பியூன்' ஒருவர் எங்கள் வீட்டைக் கடந்து சென்றுகொண்டிருந்தார், என் அத்தை உடனே அவரிடம் 'சுந்தர் ஆபீசில் இருக்கிருரா?'' என்று விசாரித்தார். அவருக்கு என்ன அவசர வேலையோ? நடந்தபடியே'' ஆமாம்! இருக்கிருரே! என்று பதிலுரைத்தார்.

ஆபீசில் இருக்கிருரா? பின் ஏன் இங்கு வரவில்லை? மேலும் ஏதாவது தகவல் கேடகலாம் என்று நினைத்த பொழுது ஆபீஸ்பியூனைக் காணேம். அவர் பாங்க்'கிற்குள் நுழைந்து விட்டார்.

ஏக்கம் நெஞ்சை அரிக்க, என் அத்தைக்கு அன்று இரவே குளிர் காய்ச்சல் மாதிரி வந்து புலம்பத் தொடங்கிவிட்டார்.

நிமிடத்திற்கு நிமிடம் 'சுந்தர் வந்துவிட்டாயா அப்பா! என் மகனே!' என்று புலம்பல் அதிகமாயிற்று பாசத்தால் அத்தையுள்ளம் துடிக்கிறது. கொண்ட நேசத்தால் என் நெஞ்சு துடிக்கிறது. அவருக்கு என்னதான் வந்துவிட்டது அன்றைய இரவு எப்படியோ ஒரு வழியாகக் கழிந்தது.

மறுநாள் காலை வானம கருமேகங்களோடு என் நெஞ்சைப்போலக் குமுறிக் கொண்டிருந்தது. மணி ஒன்பதுக்குமேல் ஆயிற்று.

என்னல் இனிப் பொறுக்கமுடியாது. அத்தை அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். இரவெல்லாம் பிதற்றினுர்கள்! பாவம்! சுந்தர் வந்தால் தான் அவர்கள் மனசும் சற்று தேறுதலடையும்.

திடீரென்று வானமே பொத்துக் கொண்டாற்போல, சடசடவென்று மழை கொட்டத் தொடங்கியது! இடி இடித்தது!

சுந்தரைக் கூட்டிவந்தால்தான் அத்தை பிழைப்பார்கள்! இல்லாவிட்டால் அவர்கள் ஜுரம் அதிகமாகிவிடும்! ஏன் எனக்கு மட்டும் என்ன? இன்னும் சிறிதுநேரத்திற்குள் இல்லை இல்லை, ஓடிப்போய் உடனே சுந்தரைப் பார்க்க வேண்டும்போல் தோன்றுகிறது? இல்லாவிட்டால்... இல்லாவிட்டால்.

எனக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும்! ஆமாம்! என் தலை சுற்றுவதுபோல் தெரிந்தது.

மடமடவென்று கதவைச் சாத்தியபடி வீதியில் இறங்கினேன். கொட்டியது மழை! வெட்டியது மின்னல்!

உடல் தெப்பமாக நனைந்தது! ஊம்! உள்ளம் உலர்ந்து வாடும் போது உடல் நனைந்தால் என்ன!

நான் நடந்தேன். நனைந்த உடலோடு நடந்தேன்.

வெறிபிடித்தவள்போல வீதியிலே விரைந்து நடந்தேன்.

ஆ! இதுதான் ஆதிமூலம் பாங்க்!

உள்ளே நுழைந்தேன். வாசல் ஓரத்தில் ஒருவர் 'பியூன்' உடையில் நின்ருர். ஆவல், ஆசை, ஏக்கம், துக்கம், ஆத்திரம், அத்தனையும் மாறி மாறி நெஞ்சில் சுழல நான் அவரை நோக்கிக் கேட்டேன்.. "சுந்தர் இருக்கிருரா?'' அவர் என்னைப் பார்த்து, நான் நனைந்த உடலோடு, ஆவல் தொனிக்க ஆத்திரத்தோடு அவசரங் கலந்து கேட்டதைக் கண்டு திகைத்திருக்க வேண்டும்.

சிறிது தடுமாறியவர், சமாளித்தபடி "எந்தச் சுந்தர் அம்மா?'' என்னை பதில் கேள்வி கேட்டார்!

"எந்தச் சுந்தரா? எத்தனை சுந்தர்கள் இங்கே இருக்கிருர்கள்'' என்று குழம்பிய மனத்தோடு'' "கணக்கர் வேலை பார்க்கும் சுந்தர்'' என்றேன். என் மனமும் கால்களும் நிலைகொள்ளாமல் தவித்தன. அவர் "அப்படியா! இதோ வருகிறேன் கொஞ்சம் இருங்கள்'' என்று என்னை ஒருமாதிரிப் பார்த்துவிட்டு உள்ளே போனர். மழை இன்னும் பலக்கப் பெய்தது வெளியே!

உள்ளேயிருந்து ஓர் இளைஞரைக் கூட்டிக்கொண்டு 'பியூன்' வந்தார் "இவர்தான் சுந்தர்!''

என்னல் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் அந்த இளைஞர் என் சுந்தர் இல்லையே! "இனனெரு சுந்தர்." என்று இழுத்தேன்.

அந்த இளைஞரின் கண்கள் கலங்கின. தரையைப் பார்த்தபடி சொன்னுர் "நீங்கள் சொல்லும் சுந்தர் என் நண்பர்தான் அவரும் கணக்கர் தான்! ஆனல் அவர்....''

இளைஞர் தயங்கினுர். "அவருக்கு என்ன?'' அலறினேன் நான் "அவர். இரண்டு வாரமாக டைபாய்டில் படுத்தவர், நேற்றுத்தான் மதுரை மருத்துவ விடுதியில் எங்களையெல்லாம் பிரிந்து போய்விட்டார்.''

"என் சுந்தர்...போய்விட்டாரா!'' என்று நான் கத்த வாயெடுத்தேன். வார்த்தைகள் தொண்டைக்குள்ளேயே புதைந்து விட்டன! என்னல் ஒன்றும் பேசமுடியவில்லை. அந்த ஆதிமூலம்பாங்க் கட்டிடமோன் தலைமேல இடிந்து விழுவதுபோல் தோன்றியது! உலகமே சுழல்வதுபோலத் தோன்றியது! மெல்ல வெளியே வந்தேன்.

வெறித்த பார்வையோடு நடந்தேன். "என் சுந்தர்! என் சுந்தர்!'' போய்விட்டார்!'' என் உதடுகள் முணுமுணுத்தன. கொட்டும் மழையில் விரக்திபிடித்துப் போய் நான் எங்கே இப்படிப் போய்க் கொண்டிருக்கிறேன்?

வெண்பாப் போட்டி

பட் டென்று தொடங்கிப் படார் என்று முடிக்க

'பட்'டென் றெடுத்துப் டடாரென்று பாமுடிக்கச்
சட்டென்று கூறினீர்; சங்கடமோ ?--இட்டம்போல்
நேர்இல் தலைப்புக் கொடுத்தாலும் நேயர்தாம்
பாரில் கவலைப் படார்.

—இரா. கலைமணி விராண்டி.

பட்டாடை பூணுதற்கும் பாற்சோறே உண்ணுதற்கும்
திட்டம் செயச்சொலலித் தீர்க்காமல்--தத்தம்
நலமன்றி, நாடாராய், நாடாளும் பேயர்
பலராலும் போற்றப் படார் !

—பாகை. சோமு. கருப்பையா, மதுரை-5.

பட்டாடை சட்டியவள் பைம்பொன் அணிதிகழச்
சுட்டாள் சுடர்விழியால் சொக்கிவிட்டேன் !--விட்டுவிட
யாரே உடன்படுவர் ? ஆண்மையுள்ளோர் உண்டோ,பெண்
பார்வையால் கொள்ளப் படார் ?

—ச. வடிவேலன், வேலாயுதம்பாளையம்.

பட்டுக் கலையுடுத்தும் பாவை தமிழணங்கின்
வட்டக் கருவிழியின் மையலிலே--பட்டார்
இரவலராய் வாழ்ந்தாலும் இவ்வேசி இந்திப்
பரத்தைக்கு வாழ்க்கைப் படார்.

— சரோசா காளியப்பன், அரக்கோணம்.

பட்ட மொழியால் பைந்தமிழைச் சாய்க்க
கெட்ட வட நாட்டுக் கீழ்க் குணத்தார்-இட்டமுடன்
சட்டங்கள் செய்தே சமர்புரிய வந்திடினும்
வெட்டுண்பார் வென்றி படார்.

—ப. சாத்தன், சென்னை-12.

பட்டினியால் துன்பமுறும் ஏழைகளைப் பார்த்துள்ளம்
சற்றும் இளகாத சண்டாளர்--வெற்றியுடன்
வேந்தராய் வாழ்ந்திடினும் மேன்மக்கள் என்றுலக
மாந்தரால் போற்றப் படார்.

—கு. மரியளம், கமுதி.

பட்டினியும் பஞ்சமும் பண்டிதரின் ஆட்சியிலே
கிட்டியது; நம்முரிமை கிள்ளியும்--திட்டுகின்றார்
ஒன்றாயி ரந்தென்னர் உண்ணாமல் மாண்டாலும்
கன்றார் கவலைப் படார்.

— நாக. நடராசன், வரவணி.

பட்டறிவின் நல்லுணர்வு; பண்பு தருங்கல்வி;
கட்டு நிறையொழுக்கு; காசினியில்--கொட்டிடுந்
தண் இன்சொல்; கொள்கைத் திடநெஞ்(சு) இவைபூணார்
நுண்ணியராய் எண்ணப் படார்.

—உடுமலை. எழிலிவேந்தன், பூளவாடி.

பட்டம் பலபெற்றுப் பல்கலையில் தேர்ந்தவரே
திட்டமாய் நாட்டைத் திருத்துவர்--கட்டாய்
உதயத்துச் சூரியனின் ஊக்கத்தால் தேர்ந்தோர்
பதவிக்கும் ஆசைப் படார் !

—புலவர், சு. ஐயப்பன் தனபதிராசன், நீராவிப்புதுப்பட்டி.

பட்டுநிகர் மேனி பவளவிதழ் புன்சிரிப்பும்
கொட்டுதடி என்நெஞ்சில் கோடியின்பம் !--கட்டழகே !
சேர்ந்துதாம் கொஞ்சுவதைச் சீலமுளார் நம்பெற்றோர்
பார்த்தாலும் கோபப் படார்.

—சு. மா. இராமலிங்கன், புதுவை.

பட்டம் கிடைத்தென்ன ? பார்புகழ வாழ்ந்தென்ன ?
கட்டம் அகன்றென்ன ? கண்டவுடன்--தொட்டணைக்க
பாரியாள் என்றொருத்தி பக்கத்தில் இல்லையெனில்
யாரே துயரப் படார் ?

—சண்முகவீரண்ணா, சித்தையன்கோட்டை.

பட்டோம் பலதுன்பம் பாவி வடவனிடம்
விட்டோம் தமிழ்மானம் வீறழிந்து--கெட்டோமே
அண்ணா மொழிபோல் திராவிடம் ஆக்கமுற
உண்ணார் உறங்கப் படார்.

—சே. அ. ரத்னகுமார், பம்பாய்.

பட்டினி போக்காத பாழ்வடவர் ஆட்சியினை
வெட்டிப் புதைப்போம் வியன்குழியில்--விட்டிருந்தால்
சீரில்லா ஆட்சியினர் தென்னாடு முன்னேற
யாரும் கவலைப் படார்.

—கே. வி. வீரண்ணா, சித்தையங்கோட்டை.

பட்டும் மணிப்பூணும் பைந்தமிழர் ஆள்வினையும்
மட்டில் கலையழகும் மாய்ந்திடினும்--கட்டழகே !
சீரார் தமிழ்காட்டும் செந்நெறியர் ! நந்தமிழர்
யாராலும் வெல்லப் படார்.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

பட்டுடுத்திப் பூச்சூடிப் பைங்கிளிபோற் பாவைவந்தால்
துட்டரவ ளாசையினாற் சோர்ந்துமிகக்--கெட்டழிவார்
ஒண்டமிழர் நல்லொழுக்கம் ஓங்கறிவு பெற்றுயர்ந்த
பண்புடையோ ராசைப் படார்.

—சு. தவசியானந்தம், அருப்புக்கோட்டை.

பட்டம் பதவிக்குப் பல்லிளிப்பார்; தம்வாழ்வில்
மட்டவிழ்ப் பூங்குழலால் மாண்பழிந்தார்--நட்பென
நம்பினார் வாழ்வழிப்பார் நஞ்சனைய இம்மூவர்
நம்மால் விரும்பப் படார்.

—பா. பா. சோமநாதன், பி. ஏ, மயிலாப்பூர்.

பட்டாளம் சுட்டாலும் பைந்தமிழைக் காத்திடுவோம்
கொட்டுவோம் செங்குருதி கொள்கைக்கே !--தொட்ட
கடமையைச் செய்திடுவோம் என்னும் கழகப்
படையினர் தூற்றப் படார்.

—தி. அதியமான், விருதைக்கல்லூரி.

பட்டம் பலபெற்றும் பண்பா டிலராக
விட்டுக் கொடுக்கின்ற வீணரெலாம்--முட்டவே
பேரமைச்ச ரானாலும் பெற்றி யுடையராய்ப்
பாரகத் தெண்ணப் படார்.

—பொன்முருகுமணியடியான், கோதைமங்கலம்.

பட்டாடை பூண்டுநான் பாதச் சிலம்பொலிக்கக்
கட்டுடலால் கண்ணால் கவின்காட்டி--மட்டன்ன
சீர்த்த இசைபாடும் சிங்கார ஆட்டத்தைப்
பார்த்தபின் துன்பப் படார்.

—இறையடியான், காரைக்கால்.

பட்டிதழ் முல்லையெல்லாம் பஞ்சுவெண் மேகம்விண்
விட்டவிழ்ந் தாற்போல் விரிந்தெங்கும்--கட்டியங்
கூறுங்கார் தன்வரவை ! கூதிர் முடிந்ததினிப்
பீறுமிடி யோசை படார்.

—தே. அறிவுடைநம்பி, சென்னை-1.

பட்டம் பதவிகளால் பண்பிழந்தோர் நல்வாழ்வுத்
திட்டம் வகுக்காமல் சீரழிவர்--முட்டின்றி
நன்றாக ஆய்ந்து நடவாதார் சான்றோரோ(டு)
ஒன்றாக வைக்கப் படார்.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு.

பட்டம் பதவியையும் பாராளும் வாழ்வினையும்
எட்டியும் பாரார் இனங்காப்போர்--திட்டம்
அகத்தி லுருவாக்கி அன்புத்தொண் டேற்றோர்
பகட்டினி லாசைப் படார்.

—செ. தங்கவேல்சாமி, மண்டபம்.

சிலேடை

பட்டிடவே பாடலால் பாற்பிரித்திங் கீவதால்
சுட்டிடத்தம் மக்கள் சுவையறிந்து--வட்டித்துப்
பாவலர்கள் நூலளித்துப் பள்ளிசெல்வித் தும்,தாயாம்
பாவையோ டொன்று படார்.

—மு. இளமாறன். பி, ஏ , பி. டி., நாகமலை.

பட்டுப்போன்ம் மேனி பவளம்போல் நற்செவ்வாய்
எட்டா நிலவுமுகம் என்றாலும்--துட்டுக்காய்
பல்வரிசை காட்டும் பரத்தையெனில்; பாரினிலே;
நல்லோரால் போற்றப் படார்.

—"முத்தூரான்" பொள்ளாச்சி.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.